உ

உலகப்பிரசித்திபெற்ற

கன்னிச் சமீன்

சரபம்

உடுமலை,

# முத்துசாமிக் கவிராயரவர்கள்.

இயற்றிய

பக்திரஸ

# கீர்த்தனங்கள்.

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,
ரப்பர் ஸ்டாம்பு மேகிகர், புக்ஷாப், புதுமண்டபம்
மதுரை.

ரை எக்ஸெல்ஸியர் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

1925. [அணா-4

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
20 JAN 1926

Q2:417
M25
181596

வெளியாகிவிட்டது!                    வெளியாகிவி

## மூக்கவேளாரவர்கள் நூதன வர்ணமெ

## டிராமாச் சரித்திரங்கள் 12-ம் ஒரே புத்தகம்.

நண்பர்கள் வெகுநாளாக எதிர்பார்த்திருந்த புத்தகம்

*மூர்துங்கள் !          புத்தகத்திற்கு          மூர்து*

இராமாயணம், சூர்ப்பநகைபங்கம், வாலிமோக்ஷம், இலங்காதகனம், நல்லதங்காள் சரித்திரம், அல்லியாசாணி சரித்திரம், மயில்ராவண சரித்திரம், மதுரைவீன்சரித்ரம், துரோபதைவஸ்திராபஹரணம், கீசகசம்மாரம், புதியவர்ணமெட்டு பார்ஸி அரிச்சந்திரன் வள்ளியம்மை சரித்திரம் முதலிய அற்புத சரித்திரங்கள் 12-ம் ஒன்று சேர்த்து, ஒரே புத்தகமாய்ப் பயிண்டுசெய்தது. விலை ரூ 1-8-0. இப்போது ஆர்டர் கொடுக்கிறவர்களுக்கு ரூ 1.

விரகாலூர் மகா-ள-ள-ஸ்ரீ சுப்பையாபிள்ளையவர்களால் சரித்திரமுழுவதும் காவடிச்சிந்து திருப்புகழ் வர்ணமெட்டுகளால் வெகு சுவையாக இயற்றிய பாடல்கள் அடங்கிய

இராமாயணம், இலங்காதகனம், சத்தியவான் சாவித்திரி, கோவலன், நல்லதங்காள், அரிச்சந்திரன், ஞானசவுந்தரி, அல்லியாசாணி, பாரதம், பாகவதம், வள்ளியம்மை, சிறுத்தொண்டன், துரோபதைவஸ்திராபஹரணம் ஒவ்வொன்றின் விலை அணா 2.

*சிவசுப்பிரமணியக் கடவுள் திருவருள் பெற்று*

அருணகிரி நாதசுவாமிகளருளிச் செய்த

## திருப்புகழ் பெரிது.

*பக்தசிரோமணிகள் பலரும் விரும்பியவண்ணம் பல பழை ஏட்டுப்பிரதிகளை ஆராய்ந்து, மதுரம் பழுத்தூறத் தேன் துளிக்கும் சந்தச்சுவை வாய்ந்து, படிப்பாருள்ளத்தையும், கேட்பாருள்ளத்தையும் பரவசப்படுத்திப் பேரானந்தப் பெருக்கிலாழ்த்தச்செய்யுஞ் சிறப்பு வாய்ந்த பாடல்களுடன் வெளியிட்ட சுத்தப்பதிப்பு.*

சந்தக்குழிப்பும் அரும்பதப்பொருளும் சேர்ந்துள்ளன.

| | | | |
|---|---|---|---|
| (642) | பாடல்கள் | முதற்பாகம் | 2—8—0 |
| (614) | ,, | இரண்டாம் பாகம் | 2—8—0 |

உ

பரமபதி துணை.

உலகப்பிரசித்தி பெற்ற

கன்னிச்சமீன் சரபம், உடுமலை

# முத்துசாமிக் கவிராயரவர்கள்

இயற்றிய,

# பக்திரஸ கீர்த்தனங்கள்.

—(*)—

வெள்ளிக்குரிச்சி ஜமீந்தார் விஜயகுமார விஸ்வநாத
பங்காரு திருமலை நாயக்கர் என்ற
தருமராஜா அவர்கள்
விருப்பத்தின் பேரில்,

---

மதுரை, புதுமண்டபம் புக்ஷாப்,
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனாரால்,
தமது
மதுரை, எக்ஸெல்ஸியர் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

விலை] 1925. [அணா 5.

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

OFFICE OF THE REGISTRAR 20 JAN MADRAS

181596



# முகவுரை.

கன்னிச்சமீன் சரபம் உடுமலை முத்துசாமிக்கவிராயரவர்கள் இத்தமிழ்நாட் டெல்லையின்கண் சீரிய கவிநலம் பெற்ற ஒருவர் என்பது வெளிப்படை. இயல், இசை, நாடகப் பாட்டுக்களாக இக்காலத்துப் பரவி வருவனவற்றில் சொன்னயம் பொருணயம் பெற்றுத் தெள்ளிய சிறுச்சிறு அழகிய வழக்கச் சொற்களால் தீஞ்சுவை சொட்டச் செறிந்து, நிரம்பிய ஆழ்ந்த கருத்துக்களையும் தம்முள்ளடக்கித் துலங்குவன பெரும்பாலும் இவரது பாட்டுக்களேயாம். சுருங்கக்கூறில் பண்டைக்காலப் பெரும்புலவர்களது பாட்டுக்களினூடு பலப்பல நயங்கண்டனுபவிக்கும் இன்ப நுகர்ச்சியே போன்று இவரது பாட்டுக்களினூடும் ஆங்காங்கே பலப்பல நயங்கண் டனுபவித்தற் கிடமுண்டெனக் கூறலாம். தற்காலத்தே கவித்திறம் பெற்ற புலவர் பலருள்ளும் இவர் பல ஜமீன்தார்களானும், பிரபுக்களானும் சிறிது மேன்பட்ட பெயரும், அங்கனமே ஏராளமான பொருளுஞ் சேகரித்து அவற்றைச் சிற்றின்ப நுகர்வானும், குடும்ப வாயிலானும் செலவிட்டு,உலகவின்பத்தை நன்கனுபவித்து, அவ்வளவில் "உள்ளந்துறந்து காலங்கழித்த தூயகுணமுடையவர்" என்பது இவரது சீவிய வரலாற்று வாயிலாய்ப் புலனாகின்றது.

இவர் தாமனுபவித்தாங்கு வறுமைத் துன்பத்தை ஒரு சித்திரத்து வரைந்து காட்டியபடி "ஈயாதலோபகுணமுடையார் இயற்கையும், இல்லாத வறுமைமிக வுடையார் இயற்கையும்" நன்கு புலனாமாறு பாடியுள பலபாட்டுக்கள் தமிழ் மக்கள் மாட்டு இன்றும் நின்று நிலவுகின்றன.

இவை நிற்க, நந்தமிழ்நாடு முழுதும் பரவி வருகிற பற்பல பத்திரஸ கீர்த்தனங்களில், இவர் கீர்த்தனங்கள் படிக்குந்தோறும் நாவுக்கோர் இனிமையும், மனதுக்கோர் உருக்கமும், தேகபுளகாங்கிதமும் உண்டாவது அனுபவத்திற் கண்டறிந்த விஷயம். இவரினது வாக்குகள் பேரின்பத்தைப் பற்றியதெனில் மனது துறவற நிலையையும், சிற்றின்பத்தைப் பற்றியதெனில் மனது இல்லற நிலையையும் பெறுமாறு செய்யவல்ல ஒன்றும்.

சரித்திர சம்பந்தப்பட்ட நாடகாசிரியர்களில் தலைமை பெற்ற இருவரில் இவர்தாம் ஒருவர். இவர் யமகம் திரிபு சித்திரம் முதலிய பாவினங்கள் கடினமின்றிச் சர்வ சாதாரணமாகவும், அபரிமித விரைவாகவும் சொல்லுந் திறமை வாய்ந்தவரென்று இவர் ஆக்கியுள சில நூலினுட் புகுவார்க்கு வாக்கின் போக்குகள் தெள்ளிதின் விளக்கும்.

இசைத்தமிழ் வல்லுநரில் "கவிராயர்" என்றால் அப்பெயர் இவரையே தழுவுமெனில் இன்னும் இவரினது பெருமையை யாமெங்ஙனம் அளவுபடுத்தற் பாற்று?

தித்திக்கப் பாடுந் திறமுடைய நாவலரில்
முத்துசா மிப்புலவ மூர்த்திபோல்—இத்தரைக்கண்
யாரிருப்பர் செப்புதற்கு யாமீண்டு கண்டிலமேன்
ஊரிசைக்கு மிந்த உரை.

இங்ஙனம்,

நா. கிருஷ்ணசாமி நாயுடு,

தமிழ் வித்வான், மதுரை.

---

மற்றொருவர்:—சங்கரதாஸ் சுவாமிகள்.

உ

பரமபதி துணை.

கன்னிச்சமீன் சாபம்.

உடுமலை

# முத்துசாமிக் கவிராயரவர்கள்

இயற்றிய,

# பக்திரஸ கீர்த்தனங்கள்.

## விநாயகர் துதி.

நேரிசை வெண்பா.

சீராருஞ் சங்கீதஞ் சேர்பதங்க ளிங்கிதமாய்ப்
பேராரித் தாரணியிற் பேசுதற்கு—நேராருந்
துங்கமிகுஞ் சங்கரனைச் சுற்றிக் கனிகொண்டோன்
தங்கக் கழலிணையே சார்பு.

சந்த விருத்தம்.

சகலஜனமன ரமியவிகசித தருணநாடக ராஜரும்
புகழுமவரொடு பழகுமகளிரு மொருமை நாடகமேபுகும்
சொகுசு பலவித மிசையி லிசைவன சுரபிவாயமு தேயென
முகடளவுவர மருள் விகடகய முகவிநாயக மூலனே.

## இராகம்-நாட்டை-தாளம்-ஆதி.

### பல்லவி.

கணநாதா உனதொரு
காட்சியிற்க டாட்சி வித்வ வரமது (கண)

### அநுபல்லவி.

மணமேவும் பங்கய
மாமல ரடியே காமுறு கின்றேன் (கண)

### சரணங்கள்.

அகவலோதித் துதிசெய்
அவ்வை யாரைக் கைலையேறச் செய்பவ (கண)

மகிமைத்தண்ட பாணி
மகிழ்சோ தரவீ ரியகா ரியநய (கண)

மூலாதாரா யானை
முகனே பார்வதி மகனே பிரணவ (கண)

தாிலம்முத்து சாமி
சரபம் பரவுங் கரவங் குசதர (கண)

4. காவுநச்சுங் குஷிகஷிக்கரும் என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான். பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

வேணும் வேணும் திருவருள் புரி கணபதிமத
வேழமுகத்தவனே பரமத
யாளமகத்துவனே வல்லபையை
மேவுசுகத்தவனே (வேணு)

அநுபல்லவி.

காணுமெத்தேவர்க்கும் ஆதிதேவா
கண்ணெதிரே யென்முன் வா வா
கார்யாநுகூலம் நேர்வது சீலம்
தார் அணிந்து முத்துசாமி போற்றுங்காலம்
கண்டு கண்டு கண்டு (வேணு)

சரணங்கள்.

துங்கதா தன்குல மேவி மேவித்
தொண்டர் மலர்வகை தூவித்
தோத்திரங்கோடி கீர்த்தனம் பாடித்
தொல்லூதியம்பெறு நல்லூரில் நீடிச்
சுகம் சுகம் சுகம் (வேணு)

## 5. தண்டபாணி சுவாமிகள் துதி.

வெண்பா.

பழனியப்பா வேரகத்தப் பாசெந்தி லப்பா
அழகுமலி சோலைமலை யப்பா—கழகம்
புகழ்பரங்குன் றப்பா பொருப்பினங்க டோறுந்
திகழ்முருகப் பாகருணை செய்.

## 6. இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

பாராமுகமேனையா இன்னமுஞ்சும்மா
பாராமுகமேனையா (பா)

அநுபல்லவி.

சீராரருப்புக்கோட்டைப் பேராய் வளர் திருநல்
லூரா மயிலேறுஞ் சிங்காரா முத்துக்குமாரா
சீலா அமுதலிங்கர்
பாலா அடியர்க்கனு
கூலா சத்ருசங்கார
வேலா நாலா விதத்தும் (பா)

சாரமில்லா தசமு சார வாழ்க்கையிலேவி
சாரம் மேன்மேலும்வந்து சாரமயங்கிப்போனேன்

தஞ்சம் உன்னிருபாத
கஞ்சம் என்னிடமேனே
வஞ்சம் கொஞ்சமாகிலும்
நெஞ்சம் திரும்பிடாத (பா)

நாடுநகர்நிதங்கொண் டாடு செல்வமிருந்தும்
தேடும்பேராசையல்லாற் பாடும்பஜனைக்கில்லை
நாட்டம் காவிசேர் திருக்
கூட்டம் மகிழ்தரும்சி
ரேட்டம் ஆகிலும்நானள
தேட்டம் செய்யவிடாத (பா)

வேதன் அமரபுரு கூதன் பொதியமலை
நீதன் அருணகிரி நாதன் பரவு ஞான
வித்து நீயேபரம
வஸ்து உடுமலையின்
முத்து சாமிதமிழ் வா
சித்துஞ் செவிகொள்ளாத (பா)

---

## 7. திருமால் துதி

இராகம்-நாட்டை-தாளம்-ஆதி.

பல்லவி.

ஜெயராம ரகுபதி ஜெயராம
தீர வீர மேரு பார கோதண்ட (ஜெ)

அநுபல்லவி.

அயராம லடிமையை
யாளவே தயாள போத முதவிசெய் (ஜெ)

சரணம்.

நித்யமோக்ஷ கதிபெற
நினதுநாம மனதுநேம மொடுசொலி
முத்துசாமி கவிபுனை
மோகதாக மேகமாகவளர் தரு (ஜெ)

---

8. மான்குசரியா என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

ராமஜெயமே நாளும் நயமே
நாமோதினுலுண்டு க்ஷேமாதிசயமே (ரா)

அநுபல்லவி.

நாதந்தருமணிக் கோதண்டவீரஸ்ரீ (ரா)

சரணம்.

நெஞ்சே இரண்டெழுத்தை
நேரமெல்லா முச்சரித்து
நேசர்மகிழ் வாரெனுமோர்
வாசகம் நமஸ்கரித்து

மிஞ்சுமவன் கீர்த்தனம் பாடிக்
கொஞ்சுமுத்துசாமியைக் கூடித்
தஞ்சமகலாதிரு நாடி
ரஞ்சித வயோத்தியிற் கிரீடி (ரா)

## பரமசிவன் துதி.

எங்கேபோனுலுமுன்கூட என்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

பத்திசாதிக்கவி டாது-மனைப்
பாசபந்தம் பொல்லாது (பத்)

அநுபல்லவி.

துத்தியரவந் தொடையாயணிவோனே
துங்கநல்லூரமுத லிங்கப்பெருமானே (பத்)

சரணங்கள்.

இல்லை இல்லை என்ற ஏக்கம்-பொரு
ளேராளப் பேராசை வீக்கம்
சொல்லின்பப்பெண்ணோடு தூக்கம்-கைத்
துட்டுப் புரட்டுவதி லூக்கம்
நல்லபுத்தியெல்லாம் நில்லாமலேநீக்கம்
ஈடோடி நாய்நானே ஈடேறலெம் மார்க்கம் (பத்)

சக்களத்திகளின் சண்டை-பஞ்
சாயப்பேச்செனக்கொரு கொண்டை
முக்கிமுக்கிக் கத்தித் தொண்டை-கட்டி
மூளைவரண்டதென் மண்டை

சிக்குமூலண்டைப்போ லுட்கினேன்பொன்கண்டை
செண்டைத்தேடிச்சென்றேன் தண்டைப்பாதத்தண்டை (பத்)

பல்லுப்போன ஒரு சீப்பு-பறி
பண்ணினதோர்பூந் தோப்பு
வெல்லுவார்முன்கைவீ றுப்பு-வெண்
மீசை மேலுங்கைக் கோப்பு

செல்வச் சினவேங்கை சிக்கிய கட்டாப்பு
தெக்ஷணாமூர்த்தியெஞ் சிவனேயுன்வெண்காப்பு (பத்)

உற்றேனுடுமலைப் பேட்டை-வந்
தோதினேனருப்புக் கோட்டை
கற்றேன்யானுஞ்சில பாட்டை-இன்னுங்
கட்டேன் குடியிருக்க வீட்டை

மற்றேன் சொல்லவேனும் வரிசைகெட்ட கேட்டை
மையற்கு ரங்குநான் செய்வதெல்லாஞ்சேட்டை (பத்)

பற்றியெரியுந் தலை மேலே-மணம்
பரிமளிக்கும் பூ மாலை
பெற்றணிந்தகதை போலே-பெரும்
பிழைவந்துநேருமுன் னலே
சற்றிரங்கிமுத்து சாமிதமிழ்ப்பாலே
தஞ்சந்தாராயோரின் தாமரைப்பூங்காலே (பத்)

---

சாவித்திரியே கண்ணே என்ற மெட்டு.

10. இராகம்-இந்துஸ்தான்-காபி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

இந்த உடம்பை நம்பி இருக்கலாமா
வந்தழூவாசைக்கே உயிர் மரிக்கலாமா (இ)

எத்தனைகோடி பேரோ இறந்து போனர்
வைத்தபொருள்கள்யாவும் மறந்துபோனர் (இ)

நம்பவேண்டிய தொப்பற்ற நாதன் பாதம்
அம்புவிதனக்கிதேநல் அருமைப்போதம் (இ)

தத்துவாதீததெய்வம்ச தாசிவமே
முத்துசாமிக் கவிப்படி மொழிகுவமே (இ)

---

## 12. கபரதரஹா என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்தோடி-தாளம்-ஆதி.

### பல்லவி.

ஆரிடஞ் சொல்லி-நான்
ஆறுவேனமுத வல்லி (ஆரி)

### அநுபல்லவி.

நேரிலேயெனக்கு நீதாயல்லையோ
நீதியேது மில்லையோ-பின்
நித்தநித்தமுந் தொல்லையோ (ஆரி)

### சரணங்கள்.

அண்ணன் மகன் பிரமன் அமைத்தது போதும்
அந்தலட்சுமிக்குந்தான் அசட்டையெப்போதும்
எண்ணில்லாமுறையிட்டும் ஏறுதோ நின்காதும்
ஏதுமறியேனென்மீதுமோதும் தீதும்சூதும்வாதும் (ஆரி)

தீமனக்குரங்கு செய்வது சேட்டை
திருட்டுத்தனமெனி லதற்கொரு வேட்டை
மாமருள்கொண்டுபா வந்தேடுமென் தேட்டை
வாணருக்குட்கெட்டகேட்டை வீணருக்குப்பட்டபாட்டை(ஆரி)

மலையத்துவசராஜ பாண்டியகுமாரி
மங்களவமுத லிங்கயர் பாரீ
தலையுடுமலைமுத்து சாமிநிதங்கோரிச்
சாற்றுதிரு நல்லூரைக்காப் பாற்றும்நீயேதானுதாரி(ஆரி)

---

## 12. ஸ்ரீமீனம்பிகைத் துதி விருத்தம்.

தாயிருக்கப் பிள்ளை தானேங்க லாமா
தரித்திரந் தனிலு மன்னை
தாங்கியூட் டுவதுண்டு தாரணியி லென்னைநீ
தனிமையாய் விடுத்தனை யினி
வாயிருக்கும் பிள்ளை வழிகண்டு வாழுமென
மற்றெண்ணி யோவ லாது
வன்மமோ நான்செய்த கன்மமோ அம்மம்ம
வனமிருக மனிதர் தம்பால்
போயிருக்கப்பெற்ற புன்மையால் என்மையாற்
புகலொணு விகல்செயு நலம்
புக்கறிகி லேன்வேறு திக்கறிகி லேன்வந்து
போதங்கொ டுத்தருளு வாய்
வேயிருக்கும் பவள வாயன் சகோதரி
விளங்கு பரிமள பார்வதி
வேனில்வே டருவெம்மை யானிதீர் தருசெம்மை
மீனலோசனி அம்மையே.

## 13. ஸ்ரீமீனாம்பிகை துதி.

சந்த்ராசரசமதலோலா என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

தாயே-அம்மா மதுரைமீ னாக்ஷி நின்
அருமையான காக்ஷி கிடைத்தால்
அடிமைக்கேது தாக்ஷி
அதுமுலக சாக்ஷி (அம்)

அம்மா-சும்மாஇருப்பதுநீ யேது என்
துன்பஞ்சொல்லொ ணாது கடைக்கண்
சுட்டிப்பார்த்தென் மீது
சுகமருளிப் போது (அம்)

பெற்ற-தாய்க்குப்பிள்ளைவி ரோதம்
தகாது நானுன் பாதம் பணிந்தேன்
தாங்கிக்கொள்ள நீதம்
தவறிடிற்பிர மாதம் (அம்)

ரத்ன-மூக்குத்தியலங் காரி முத்து
சாமிசொல்லு தாரி சொக்கேசர்
முத்தங்கொஞ்சும் பாரி
மோகனகெம் பீரி (அம்)

14. ஸ்ரீ சிவசுப்பிரமணியக் கடவுள் துதி.

விருத்தம்.

மணிகொண்ட கிரியைப்போலும் வாங்குபூ ணூலும்சாலும்
திணிகொண்ட சத்திவேலும் திமிர்மணக் கடம்புநாலும்
அணிகொண்ட மார்பின்மாலும் அரிவையர் இரண்டுபாலும்
பணிகொண்ட தண்டைக்காலும் பாடுவாம்மேலும்மேலும்.

15. ஓரடிப்பதம்.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

திருநல்லூர்க்கார்த்திகைத் தீபம்-தெரி
சித்தவர்க்குப் புண்ய லாபம்
வைத்ததுஜெ கப்பிர தாபம் (திரு)

அநுபல்லவி.

உருகியானந்தக்கண்ணீர் பெருகிவெள்ளங்கொண்டோட
உத்தமமார்க்கமென்று சித்தர்மற்றோர்க்குங்கூட
உச்சிகு வித்தக ரத்தினர்நீட
மெய்ச்சிவ பத்திப ழுத்த விசேட
உடலம்புளகம் பெறவே பவனியி
னிடையின் றமுதம் பொழிமாமுகிலென
ஓவாதமூவர்சொன்ன தேவாரத் திருப்பாட்டை
ஓதி பஜனைவந்த வீதிக்கருப்புக்கோட்டை (திரு)

சரணங்கள்.

மூலமாமுன்னெழுந்த பாலசந்த்ரகணேசன்
மூதண்டமெங்குந்தன்கை மூக்கிலுணரும்வாசன்
சாலவினை அன்பர்க்குத் தவிர்க்குமங்குசபாசன்
தன்மூஷிகத்தில்வரத் தம்பியானவுல்லாசன்

சமரச குமரகுரு பொன்னகரில்
அமரர் அமர முன்னொரு வரந்தரு

சத்திக்கைவேல்விநோத முத்துக்குமாரசாமி
தித்திக்க வேயிருபக் கத்திற்குலாவுதினைத்

தானவள்ளி மாது தெய்வ யானை யெனுமாது
மானயன ரோடுதிகழ் கானமயில்மீது

தங்கிவரச்சோபிதமி லங்குவதைப்பாரெனவி
டங்கர்சிவப்பேரமுத சிங்கரிடப்பால்விளம்ப

தாயமுதவல்லி ஏயமிடைமெல்லி
நேயமொடுபுல்லி வாயழகுசொல்லித்

தனயரிவரிருவர் சகலஉயிரும்நனி
தழைய அருள் புரிவர் கவலையிலையெனலுந்

தஞ்சமருவுஞ்சரணர் அங்கைகொட்டியார்க்கச்
செஞ்சடையிருந்தவொரு கங்கையெட்டிப்பார்க்கத்

தன்காளை வாகனமு டன்காளியேறிவரு
பொன்காமதேனுவும லங்காரவீதிவரச்

சண்டே சுரர்நிர்மால்யந்
கொண்டே தொடர்ந்தேகுதல்
கண்டே தந்தைகால்வெட்டித்
தொண்டே சிறந்தவிதம்

சற்சனர் மெச்சிட அற்புத கற்பக
நாடாளு மிந்த்ராதியர்
உற்சவ லட்சணம் இப்படி வைத்தவர்
ஏனுதி அன்பானவர்

தாமாக வந்தாரிணை நாமாவெனும் போதொலி
தகுந் தகுமென்றுதவி உகந்தவோர் துந்துமியு
மதிர்ந்திடு ஜண்டையொடு மிகுந்து முழங்கஉயர்
தம்புருசங் கீதமுதிர் நாகசின்னம்பாட
அன்புருக்கந் தேடினவர் தாகமின்னுந்தேடச்
சந்தி மகிழ் சரபத்தின் பேர்புனைந்த மாட்சி
மூர்துமுடிமலைமுத்து சாமிகண்டகாட்சி (திரு)

## 16. ஆசிரிய வண்ண விருத்தம்.

சந்தக்குழிப்பு.

*தத்தத்த தானதான தத்தத்த தானதான*
*தத்தத்த தானதான தனதாந.*

பத்திப்பு ராணசீலர் தித்திப்பு நேர்கவீசர்
பட்சத்தி லேயெநாளும் விலகாமே
பற்பட்ட வாய்கபோல மிச்சித்து வேசைமாதர்
பக்கத்தில் வீழ்வர்நேச மணுகாமே
செத்திட்ட போதுமீகை வட்டிக்குமேதராத
சித்தத்து லோபர்வாசல் மிதியாமே
செச்சைப்புயாசலாதி பச்சைக்கலாபம்வேல்கொள்
செப்பத்தை யேழையேன்மு னருள்வாயே
சத்தித்த மாநடேசர் நெற்றிக்கண் மீதிலேச
னித்துத்த டாகமேவி வருபாலா
சஷ்டிப்ர தாபநேம முற்றுப்பராவுதூயர்
தத்திற்ப டாதுவாழ்வு பெறநேர்வாய்
முத்திக்கு மோய்விலாத சித்திக்கு மூலமாகி
முட்டைப்பி ரானுமான குகவேளே
மொக்கிட்ட பூநனூரி லர்ச்சித்த கோயினீடு
முத்துக்கு மாரசாமி முருகோனே

## 17. வேறு சந்தக் குழிப்பு.

தனத்தத் தாத்தத் தானன தானன
தனத்தத் தாத்தத் தானன தானன
தனத்தத் தாத்தத் தானன தானன—தனதானு.

சிரித்துப் பார்த்துப் பார்வையி னுலுள
நெகிழ்த்துக் காட்டிச் சாடைக ளேபுரி
திருட்டுக் கூட்டுக் காரிகள் நாரிகள்—மயலாலே

திகைத்துத் தீர்த்துப் பாடிய பாவலன்
மலைக்கட் கோட்டிற் போய்விழு போதெதிர்
தெரித்துக் காட்டிப் பேருரு நீதர—விலையோமேல்

விரித்துச் சாற்றக் கூடிய தேதிரு
வளத்துக் கேற்றுக் கோரவி யாதிகள்
விலக்கிக் காத்துக் கீதவி னேதநற்—பாமாலை

விளக்கிச் சாத்திப் பேணிய நீபமொ
டமைத்துக் கீர்த்திக் கோரடை யாளமு
மிருக்கப்பூர்த்திச்சேவையையோர்முறை—அருளாயோ

உரித்துப் போர்த்துத் தோலணி வார்மறை
எழுத்தைக் கோத்துக் காலணி வார்அவை
ஒலிக்கக் கூத்துத் தானிடு வார்நுதல்—வருபாலா

உறிக்கட் டேக்குப் பால்தயிர் கோவியர்
மனைக்கட் போத்துப் போனக நேர்பவ
னொருத்திக் காப்பட் டாடைசெய் மாயவன்—மருகோனே

அரித்தைப் பாட்டுக் கிரனை யேசிறை
பிடித்துப் போட்டுப் போனவன் மாமலை
அழித்துக் காக்கக் கூரயி லேவிடு—மதிதீரா

அடுத்துத் தோப்புக் கூவமெ லாமடி
யவர்க்குக் கோட்டிக் கானந லூரெனு
மருப்புக் கோட்டைக் கோபுர மேவிய—முருகோனே.

## 18. வேறு சந்தக் குழிப்பு.

தன தனந்தந் தன தனந்தந் தன தனந்தந் தன தனே
தன தனந்தந் தன தனந்தந் தன தனந்தந் தன தனே
தன தனந்தந் தன தனந்தந் தன தனந்தந் தன தனே
தன தானே

புருவமொன் றுந் திலகமுங்கண் பெறுமுனந்தண் கமலநே
ரிருபதங்கும் பிடுதலும்பின் புனிதர்சங்கம் புகுவதே
புகலுடம்பின் பயனெனுஞ்சங் கதிதெரிந்துந் தினமெலாம்
விருதாவே

பொருள்விரும்புங் கனகுடும்பர் தொடர்தருஞ்சங்கடமதா
லலையுமென்றன் பிறகுவந்திங் கழுதுதெண்டன் புரிகுவார்
புடவையென்றுஞ் சரிகையென்றுங் கலநெலென்றுஞ் சிசு
விலா—மலடானே

திருமணம்பின் பொருதரம்பெண் டருவதுண்டென் றிசைவதா
வதில்விளங்குஞ் செலவுகின்றன் புலமைபொங்குங் குடையிலோர்
திறமையென்றும் பகர்வர்தஞ்சந் தடியிலங்கிங் .குறுதிதேர் ·மன
னாடே

சிலபுகன்றுங் குடிதுலங்குங் கிரமமென்றும் புதியவா
பரணமென்றுஞ் சலிகையென்றும் பலவிலங்கங் களிலுமே
சிதையுமுன்பிங் கியையுமுன்றன் தெரிசனந்தந் தடிமைபா
லருளாயோ

தருணமங்குஞ்சிசுவமைந்துங் குமரனென்றுந்திரைகள்சேர்
கிழவனென்றும் புதுமைதந்தன் றெருசெழும்வெண்கவுரிய
தரமுணர்ந்தின் புதவுதுங்கஞ் சிவமதங்கொண் டுளவெனு
வருவோனே

தருவர்முந்துஞ் செயமறிந்தன் றமரரின்பம் பழயவர்
துயரவெங்கண் புரிபுலிங்கஞ் சரவணந்துன் றிடவொர்சேய்
தருநலந்திண் புவிபுகழ்ந்தும் பரவியுய்ந்துங் குலவுமா
முதலோனே

அருணையின்கண் பிரமனுந்தண் டுளவனும்பண் டெதிரிடா
முடியுடன்பொன் சரணமெங்கென் றளவிடுஞ்செங்கனலதா
அதிசயந்தங் தருளிவந்தங் கொருபொயன்பங் கயனெனு
நவில்வோனே

அணிபுயங்கம் படமொடுங்குந் தலைகடொங்குந்தெரியவாய்
தமிழ்வளங்கும் பஜனையுஞ்சந் ததமுழங்குந் திருநனா
ரமுதலிங்கஞ் சிவமயங்கொண் டுலகமெங்குந் துதிகளோ
ரிறையோனே

## 19. நேமமாப்பணி என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்பியாக்-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

தேமிகுந்தமுத்து சாமிசெந்தமிழ்க்கு
தாரனே வருதிருநல் லூரனே-ஜெய
தீரனேப் பச்சைமயூரனே முத்துக்கு
மாரனே அலங் காரனே

நீமகிழ்ந்திருக்க லாமே முன்புசொன்ன
தீரமே விதியுமது சாரமே-இனி
நீக்குவேனே உன்றன் வாக்கிற்செய்யுப
காரமே இந்த நேரமே

கந்தசெண்பகம்பொ ருந்துடம்புகொண்ட
காணியே குமரதண்ட பாணியே-உன்னைக்
கண்டுகொண்டபின்பு வந்திடும்பெயர்கல்
யாணியே மனம் பேணியே

சந்ததந்துலங்கு மிந்தவின்பம்நம்பு
நேசமே சிறிதுமில்லை மோசமே-மிகு
சாந்தமானவிழி நேர்ந்ததேகந்திவ்ய
வாசமே கொள்ப்பிர காசமே

வரவிதுதகியம்மா என்ற வர்ணமெட்டு.

20. இராகம்-நாதநாமகிரியை-தாளம்-ஏகம்.

பல்லவி.

கருணைநீ புரிவாயே-அடியேன்
கவலையுந் தெரிவாயே

அநுபல்லவி.

பிரணவ தேவா அரிமுதலோர்தாம்
பரவு திருநல்லூர் நீதா
அருளினடேசர் அமுதலிங்கேசர்
அகமகிழ் குருநாதா (கரு)

அநித்திய வாழ்விற் செனித்தவெம்மாயைக்
ககப்படாதிருக்க வென்னெண்ணம்
உனைத்துதித்திடவே நினைப்பிக்காயானல்
உய்வதிங் கெவ்வண்ணம் (கரு)

உள்ளேபகையும் உதட்டிலே உறவும்
உள்ள பாசாங் கரைக்கூடித்
தெள்ளறிவழிந்தேன் செய்கையைமறந்தேன்
தீனன் எனை நாடி (கரு)

புவனத்தைச் சுற்றி ஒருவட்டம்நொடிக்குட்
போய்த்திரும்பின மயில்வீரா
கவிமுத்துசாமி மனமொக்கப்பேசும்
கார்யா னுசாரா (கரு)

21. வெள்ளிமலை யொத்தபலமேடை என்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

உடுமலையின்முத்துசாமி பாட்டை-மகிழ்ந்
தோதிடுநல்லூரருப்புக் கோட்டை-தனில்
உயருமமுதலிங்கர் குமர னருள்விளங்கும்
முருகன் அரி மருகன்

கடகளிறு தாதன்குளத் தண்ணன்-சடை
கட்டும் பாலசந்திரமுக் கண்ணன்-மகிழ்
கந்தனென்ற தம்பிநட னந்தருது ரங்கமயில்
வீரன் அலங் காரன்

காணவேணும் காணவேணு மென்று-நான்
காதல்கொண்டு நீதமுடன் சென்று-நேர்
கண்டுதெரிசித்தபலன் மண்டையுள்ளமட்டுமற
வேனே இனி நானே

பூணுமணித்தேர்வடத்தைத் தொட்டேன் அவன்
பொன்னடிக்கணண்ணியேகும் பிட்டேன் அப்
போதுகந்தவேளிருந்த சோதியென்சொல்வேன்மகிழ்ந்து
போனேன் அருளானேன்

சுத்தமிகு ரத்னமணிக் கிரீடம்-சிவ
சுப்ரமண்யன் அற்புதல லாடம்-பெற்ற
சுகிர்தந் திலகந்திகழ் வதனங் கமழுங்குறு
நகையே ஒரு வகையே

வைத்த விரு பக்கமிரு பெண்கள்-சாமி
வடிவம் பருகுமவர் கண்கள்-அங்கு
வாய்திருந்த தொண்டர்பந்தி முந்திநின்ற வெண்பசுந்து
நானே சொல்லு வேனே

## 22. விருத்தம்.

இன்னமெத் தனைநாள் இருந்தாலு மொருநாள்
இறப்பதே சத்தி யந்தான்
என்றெண்ணி யெண்ணியான் உன்சந்நி திக்குவந்
திடுகின்ற முறையொன் றுகேள்
புன்னகைப் பெண்மாயை தன்னிலே மனமது
புகுந்துகொள் ளாம லெங்கும்
பொய்வார்த்தை விள்ளாமல் ஐயமேற் பார்களைப்
போவென்று தள்ளா மல்வீண்
சொன்னகெரு வத்திலே அள்ளாமல் அவகீர்த்தி
சூழாம லுள்ள வரையும்
தொண்டர்கீழ்த்தொண்டனுன் உன்கோயில்வலமாய்த்
துதித்திட விரும்பு கின்றேன்
தென்னைமா பலவுமல் லிகைமுல்லை வர்க்கஞ்
செழித்ததிரு நல்லூ ரில்வாழ்
செம்பாக குணசீல சம்பூர்ண சுகலோல
சிங்கார வடிவே லனே

23. இராகம்-மோகனம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஏறு தியே (ஏ)

ஈடேறும்வழிதிரு நீறு கொடுத்தருள் (ஏ)

இன்பங்கொண் டென்றும் இன்பங்கண் டங்கும் (ஏ)

எத்திக்கினுமெச்சப்புகர்வெற்றிக்கொருகட்கத்தொழில் ()

எதிரே நின்றதி சூரன் கதியால் வென்றது பேசும் (ஏ)

ஈன்றோர்புகழ் மேம்பாடுறு சான்றோர்குல வேந்தாகிய (ஏ)

அநுபல்லவி.

கானூர்கூடு மெம்பிரான் தம்பிரான் கதிசும்மாதாரான்
நீநாடி நெக்குருகி நெக்குருகி யுள்ளம்
தேனுகப் பெற்றாய் சிவானந்தவெள்ளம் (ஏறு)

சரணங்கள்.

ஏற்றிவைத்துத்தானேறுத ஏணியைப்போலே
எவர்க்குஞ்சொல்லுவேனெனக்கில்லை நெறியிக்குறையாலே
போற்றினேனுக்குப் பூதிசாதனம்
பூரணமாய்ச்சேரக் காரணசாதனம்
பூமிக்கிடை நிருமித்துத் தாமித்தைகள் விடுவித்துத்
தேமிக்கணிதமிழ்முத்துச் சாமிக்குதவியவஸ்து (ஏறு)

24. இஸ்கே பேகல்மே ஹோமைன என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

நானிருப்பது திரு நல்லூரே-தூது
நாடியெனக்கொருவர் சொல்லாரே

அநுபல்லவி.

தேனிருக்குங்கடம் போனெருக்குக்கிடம்
சேர்கொடி முத்துக்கு மாரசாமிதன்னிடம் (நா)

வண்டுகிளியன்னம் உண்டுசொல்லமுன்னம்
கொண்டநெஞ்சுபின்னம் விண்டுவராமலின்னம் (நா)

முந்துமுடுமலை முத்துசாமிசொல்லைப்
பைந்தமிழிற் கொள்ளும் பசுந்தோகையானெல்லை (நா)

---

25. குடியிற் பிறந்த குயிலே என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

என்ன பிழைப்பெனக் கென்ன சிரிப்பெனக்
கென்னகுதிப்புப்பின் என்னமதிப்பு
மன்னுநல் லூர்விடங்கா-கிடைக்கும்
பொன்னே அமுதலிங்கா

மான்மழுவாங் — கான்மலர்க்கை
வான்முதலே — வன்னியங்கண் ணுதலே

பூப்புக்குமரிகள் — காப்புக்குடும்பப்போல்
லாப்புக்கு மென்னிரு — மாப்புக்கும்வந்த
மூப்புக்குங் — காரணமாய்ச்-சுடலைத்
தீப்புக்கங் — தோபிணமாய்

முடியுமுன்னே — நெடிதருளி
அடிமைகொள — முன்வரக்கூடாதோ

நீர்க்கண்டந்தப்பிகின் — சீர்க்கண்டர்போற்றிசெய்
மார்க்கண்டன் பத்தியும் — மேற்கண்டறியேன்
கார்க்கண்ட — சுந்தரனே நம்பிக்குக்
கோற்கண்ட — ரும்பரனே

காமர்முத்து — சாமிசித்த
மேமிகுத்த — காருண்ய கங்காதரா

26. தில்பரநஹி என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஏகம்.

பல்லவி.

ஆயிரங்கவி பாடினுலு மதிலென்ன பலனே-நான் (ஆ)

அநுபல்லவி.

அருளாட்சி மாட்சி யமையக் கண்டிலனே (ஆ)

### சரணங்கள்.

போயிரந்தே அலை யாததிருப்திப்
பொருளுப தேசமொன்று
நாயிறந்தாற்போ லிறவாத முன்னமெஞ்
ஞானப்ர காச மொன்று
நண்ணுகிலேனே புண்யம் பண்ணுகிலேனே
நண்ணியசிவ புண்ணியர்மீச்சிலுண்ணுகிலேனே
நன்மையார்க்கும் எண்ணுகிலேனே (ஆ)

அண்டியகீரன் மெய்மொழிகிள்ளை
அருணகிரி நாதன்
அகஸ்தியர்முத லெவர்க்கும்ப்ரணவ
மளித்தநன் நீதன்
அருப்புக்கோட்டையிலே நீ இருப்புக்காட்டையிலே
அல்லாமலுண்டோபின் எல்லோருமேதிரு
நல்லூரின் பாட்டையிலே
ஐக்யமுத்தி அமலம் நாட்டையிலே (ஆ)

ஆனசகலர் அருட்குருவாலே
அடையுங் குருபரனே
ஆறுமுகங்கொண்டு சூரரை வாட்டி
அடும்பன் னிருகரனே
அந்தக்கரணமே அர விந்தச்சரணமே
ஆமயலற உடமலை முத்து சாமி தருணமே
ஆக்குன் கீர்த்திக் கதுவுங்கிரணமே (ஆ)

27. விருத்தம்.

பூதவச மானநர்க் கிரன்க விக்குப்
பொருப்பிடித் தாள விலையோ
போயுருள மலையேறும் அருணகிரி முன்வந்து
புகழ்வரந் தரவு மிலையோ
கேதசுர மீனவன் சுகசரீ ரம்பெறக்
கிருபைநீ செய்ய விலையோ
கிரணமுடி இந்திரன் பதவியும் பொலியக்
கிலேசந் தவிர்க்க விலையோ
மூதறிவு தந்தெனைப் பாதுகாப் பதுமட்டு
முடியாத தோமு ருகனே
முப்பத்து முக்கோடி தேவருங் கைதொழும்
முத்துக்கு மார சாமி
சீதசந் திரபாத கணபதிச கோதரா
செழிதிருநல் லூரில் வாழும்
செம்பாக குணசீல சம்பூர்ண சுகலோல
சிங்கார வடிவே லனே

பொன்னுலவும் பன்னிருகைவேலா என்ற வர்ணமெட்டு.

28 இராகம்-இந்துஸ்தான்-பியாகு-தாளம்-ஆதி.

சரணங்கள்

ஓதிருநல் லூர்வளரொய் யாரா-புகழ்
ஓராயிரம் ஆராய்விவ காரா-பால
உண்ணுமலை கண்ணுனகு மாரா-இந்த
உலகளவுமே ஒருநொடிதனில் வலமிடவரு திடமருவிய
உக்ரரண விக்ரமம யூரா இம்ப
ரும்பரெலாம் நம்பியவு தாரா

சாதிமதச் சேதியில தீதா-திகழ்
சந்தமெனில் முந்திமகிழ் காதா- சிவ
சங்கரனும் பொங்கநவில் போதா-முத்து
சாமிக்கவி யுடுமலையனை நேமித்திட வருள் புரிகிற
தங்கநிறத் தண்கமலப் பாதா மனம்
தங்கநிறை கின்றவருள் தாதா (ஓதி)

பக்குவமா எற்குருசி நேகம்-உன்மேற்
பற்றினது முற்றியநல் யோகம்-எண்ணம்
பத்திதனை நத்திடும்வை போகம்-தந்து
வித்தரு ளேயித்ததி மேலிட்டிதம் வாசித்துளம்
பாடுவது மேமதுர பாகம் பழி
விடவரும் பாடுகளை நேகம் (ஓதி)

முக்கியமோர் பேச்சுமில்லை மூச்சும்-இல்லை
மோசமொரு வேளையெனக் காய்ச்சும்-சுரம்
மூண்டதுகா ணீண்டவிழிப் பாய்ச்சும்-புனல்
முத்துக்கள்வெ டித்துச்சித றத்தக்கக ணத்தில்விரை
முந்துவதோ சந்தனமாம் பூச்சு ஊற
றிந்திடவே வந்ததையோ ஏச்சு (ஓதி)
சித்தமதுள் ளைத்திடும்வி சாரம்-தனைச்
செப்பமன மொப்பலையிவ் வாரம்-வாயிற்
செல்வதில்லை எள்ளளவர் காரம்-நான்
செய்தவமதி லெய்தியகிளி வைததுபல நொய்தவைதரு
சீர்களெலாம் பார்வையிலிந் நேரம் நீயே
தேர்வதுதான் கோருமுப காரம்

29. ஓரடி.

இராகம்-நாட்டை-ரூபகம்.

பலல்வி.

விதரணகணபதி ததிவருவாய்-நம்பினேனுன்றன்
பதமலர் கிதிகதி அதுதருவாய் (வி)

அநுபல்லவி.

மதுரபக்ஷண வகையனந்தம்
வைத்துப்படைத்து வாழ்த்திவாழ்த்தித்
துதிசொல்லித்தலை தாழ்த்தித்தாழ்த்
சுடுமணல் மெழுகென மனமுடை அடியவரிடம்
வெனதடை-சோதிக்காதே வாதிக்காதே

## சரணங்கள்.

தும்பிக்கையாலொருத்தி தன்னைத் தூக்கிக்கையிலிருத்தி
நம்பிக்கை தந்தசித்தி இந்த நானிலஞ் சொல்லும் நத்தி

நாகப்பதியிறை பெறுமொரு சோலைக்கும்-புனல்
காகத்துரு வொடுதரவரு லீலைக்கும்-மறை

நாலுக்கும்பொருளெனவதன் மேலுக்கும்பிரணவமெனும்
நீலச்சிந்துர வதனசு சீலத்தைங்கர சிவசுத

நானுவித நீபுரி பாடலுக்கும் சாட்சி பலபல
தாமோதுவர் ஆலயம் நாடலுக்கும் எண்ணமுற்றிந்த

நாயடியேன் செந்தமிழா லுன்பதமே பாட
நீயுதவும் பண்பதனல் அன்பர்கள்நேர்கூட
நாடகசம் பந்தமதே எங்கணும்நீநாட
ஞாபக மொன்றும்பெறுவேன் என்கலிநோ யோட

நாட்டாமதமே செயல்விளை
யாட்டாகிதமே திருவருள்
கூட்டாயுதமே உளததை
யோட்டாவிதமே னையா

நாமத்தியல் பெறு முத்து
சாமிக்கவிபுனை வஸ்து
நீமற்றிணை யறு சித்து
நேமப்படி தெரி சித்து

நலம்பெறமிக வலங்கிர்தமுடன்
இளம்பிறைமுடி துலங்கிடஉயர்
நாற்புயா சலற்புதமா (வி)

---

கலித்துறை.

முனந்தவசீலர் மொழிதீர்த்த யாத்திரை மூர்த்திதெரி
சனந்தலவாச மிவைவே றனுட்டிக்கச் சக்தியுண்டோ
தினந்தமியேனுனை யேநம்பி னேன்வினை தீர்புகழ்தற்
கனந்தனு மேமயங் கும்பழ னபுரி ஆண்டவனே

ஆயேசையா என்ற வர்ணமெட்டு.

இராகம்-அதிரூபம்-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னசொல்வேன் இருக்கின்ற விசாரம்
எல்லாந்தீர்ப்ப துன் பாரம்-மிகு

அநுபல்லவி.

உன்னதமான வடிவேலா-தெய்வப்
பொன்னகர் போற்று மனுகூலா
உமாபதியின் பாலா
சமானமற்ற லோலா
உற்பவஞா னப்ரபலா சுப்ரமண்ய கற்பகமே (என்)

சரணம்.

முன்னம் அருணகிரி நாதன் தமிழ்
சொன்ன சந்தத்திலேவி ஞேதன் என்று
முன் கைக்கிளி யாக்கி வைத்த
மூல மெல்லாம் நோக்கி நான்
முறையிட்டேன்குறைபட்டேன்மதிகெட்டேன்விதிவிட்டேன் (எ)

சிவகாருண்ய மெனக் கில்லை பல
பாவமுஞ்சூழ்ந்து கொண்ட தொல்லை ஐயா
சித்ரமயில்வீரா கவி
முத்துசாமி நேராய்
தெரிசனமே தரவருணீ பரமகுரு தெரிகுவையே (என்)

அள்ளி அள்ளிக் குடிக்கும் என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாகு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

கீர்த்தி மிகுந்ததிரு மூர்த்தியாமோரொரு
நேர்த்திகொண்டதைப்பார்த்திரு-நல்லோரொரு (நே)

உன்-கெருவமொடுங்கி அருகிலிருந்து
பொருளுணர்ந்துகொ ளிருளும்நெஞ்சே (கீர்)

காத்திருந்த சித்தருங் கண்வாசியோகரும்
காயசித்திக்கு நத்தியே-மனம்பற்றியே

அந்தக்—கஞ்சிமலையில் வந்துகுகையில்
உஞ்சிதவம னந்தஞ்செய்கிறார் (கீர்)

மூன்றுகுணங்களிலுந் தோன்றுமுன் சித்திரம்
மெய்முத்து சாமிமித்திரம்—உன்நற்றிரம்(மெ)

இந்த—மூதுலகினை ஆதியருளிப்
பாது புரிந்து மோதியழிக்கும் (கீர்)

தேன்தாருந் தாமரைமேல் ஏன்றபாலாழிமேல்
திவ்யகைலாய வெற்புமேல்—பாலாழிமேல் (தி)

அம்—செஞ்சொ லணங்கி பொன்பெறுமங்கை
அம்பிகையென்ற பெண்களுடனே (கீர்)

---

தாஜராஜ தாஜராஜ என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

வந்திவ்வேளை தந்தருள்வாய் மகிமையின் காட்சி—ஒளிர்
மாணிக்க மூக்குத்தி மண்டலம்பாணிக்கும் மதுரைமீனாட்சி
சந்ததந் திருமண சுந்தர வாமந் தங்கியவோர் சூட்சி
தமனக மகிழ்மந் தாரை மல்லிகை சாரசமிரு வாட்சி
தாளிலணிந்துகணோர்பணிந்தாலவர் தமக்குண்டோதாட்சி
சரபகவிப்பேர் மருவியமுத்து
சாமிமனோசாட்சி சாமிமனோசாட்சி சா-சாட்சி (வந்)

இராகம்-நோட்-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

சர்வலோக சாட்சியே தாயேமீ னாட்சியே
தாட்டீக மான தடாதகைப் பிராட்டியே
தாட்சிஒட்டியே காட்சிகாட்டியே
தாங்குவாய் தருணமெலாம் திருவிளையா டியம கரா புரிதனிலே
தாமரஞ்சிதபுய சோமசுந்தரநய
தாரமாங் காரணி (சர்)

---

வங்கார மார்பிலணி என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

பாராதி நாமகன ரூபவிப காரமிகு
மாயாவி லாசமிதி லேழைதடு மாறிவெகு
பாடேப டாமலிது நாடகமெ னுவுளவு-பகர்வாயே

சீரான வாழ்வுபிணி தீருடல்கி லேசமது
ஞானனு பூதியழி யாதபுகழ் பாடுதமிழ்
சேராவ வீகைபுனை வாகைவர மேயினிது-தருவாயே

போராடி யோடிமறு காலணுகி மூடுநுதல்
நீரான தேதெரிய நேரிலதி சூரன்வரு
போதாதி தேவசிவ நேசமன மானலய-வகையாலே

ஏரார்கை லாசபதி ஜோதிவடி வேடுறையு
மாதார காதிருந லூரடியர் பூசைமகிழ்
ஏனுதி நாதசுக போதஉசி தாதியம-நெறியோனே

தையலே சையோகம் என்ற மெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

எந்தவிதத்தினும் நிந்துணை தந்தாள
ஏனே இன்னும் தாமதம் சரி
தானேவர்மமே நிதம் (எந்)

அநுபல்லவி,

விந்தை தருஞ்சித்தி வித்தகனே சத்தி
வேலாசு சீலா மறைமூலா வனுகூலா
வேடிச்சி நன்னேசனே காளாம்
பாடிக்கும ரேசனே (எந்)

சரணங்கள.

நானிங்கொருபாவி நாளுந்துயர்மேவி
நைந்தேன் கரைந்தேன் சிதைந்தேன் நிலையுய்ந்தேன்
நம்பிமோ சமாகுமா-பழி
யும்பின்வீ ணேபோகுமா (எந்)

தொண்டர்க ளீடேற்றம் சொல்லும் புவிதேற்றம்
சூதோ இராதோ பின் ஏதோ என்பால் வாதோ

தோகைம யில்வாகன முரு
காகுஞ்ச ரீமோகன (எங்)

போத குருநாதா புலவர்க் கொருதாதா
புண்யாகா ருண்யாலா வண்யாசுப் ரமண்யா
பூமிபுகழ் யோகனே முத்து
சாமிதமிழ்த் தியாகனே (எங்)

## விருத்தம்.

என்னபிழை நான்செய்தி ருந்தாலு மன்னித்
திடும்படி இறைஞ்சு கின்றேன்
எப்போது மென்மனதில் வைப்பாக நீவந்
திருக்கவே வேண்டு கின்றேன்
அன்னை தந் தையர் தம்மை நிந்திக்கு மூடரிடம்
அணுகாத விரதமென்றும்
அடியேன் அனுட்டிக்க ஆவலுறு கின்றேன்
அதற்குமே லென்ன சொல்வேன்
வன்னமிகு நடனதிட மயில்மேல லங்கார
மதுரமா ணிக்க மணியே
மாவுஞ் செழுந்தேனும் வள்ளிக்கு றத்திதர
வாங்கிமகிழ் மணவா ளனே
சின்னமாங் குயில்மதன் சேனையும் பூசனை
திருந்துதிரு நல்லூ ரில்வாழ்
செம்பாக குணசீல சம்பூர்ண சுகலோல
சிங்கார வடிவே லனே

இராகம்-பிலஹரி-தாளம்.சாப்பு

பல்லவி.

என்னகேள்விமுறை இல்லையோ சாமி பாராமுகமிதில் (என்)

அநுபல்லவி.

பொன்மயூரப்ர சன்னு பழநி மன்னு என்னையா (என்)

சரணங்கள்.

பூமியெல்லாந்தொழ வேமிகுந்தாய்சிவ
காமி சுதா முத்து சாமி சதாநத்தும்
பூம்பாதா கடனும்பாது காக்க வீம்பா பின்னிதில் (என்)

தொடும் பத்திநெறி குடும்பத்தில் வளர்
கெடும்புத்தி யாலே விடும்பித்தன் யானே
துயரமே நித்தம் உயரநான் சித்தம் அயரவே விட்டாய் (என்)

தீராத சஞ்சலம் போராட நானுன்முன்
சீராட நீயருள் கூராதிருப்பது
சீலமோ வனு கூலமோ கலி காலமோ விது (என்)

---

வண்ணச் சந்தம்.

இராகம்-இந்துஸ்தான்-தோடி. தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

களிசிறந்திடு பெண்களின்ப மெலாம் நுகர்ந்தனன்
குடி தொடர்ந்து மயங்கினன் துரைமார் விருந்துடன்

கண்ட நாடக சங்கமோகன
டம்பர் வீணர்ப ணம்பெருதவர்

காலடிக்குளு மோடி விழுந்தனன்
நூல்படித்தும்வி வேகமுணர்ந்திலன்
சிரஞ்சீவி யாய் இருக்க நேருமோ

தூளி மழுங்கிய கண்கள் வந்தபினே முனந் தினந்
திரியு மந்த விடந்தொறும் பலபேர் இவன் கெடும்

பண்பு பாரென நிந்தைபேசவு
டன்கையாதர வொன்றுதேடுமென்

ஊழ்வினைப்பயன் மாமன் மகிழ்ந்துபெண்
ணே கொடுப்பது மேது என்புறம்
பரஞ்சோதி ஞானநிட்டை சேருமோ

குளிர்க ருங்கட லுண்ட கும்பனுமே தகுஞ்சதுர்
முகனுமிஞ்சிய சந்தவண்டமிழோ திடுஞ்சுகங்

கொண்ட மானுரு வொன்றினுமம
றிந்ததாரக மந்த்ரமாலிகை
கூறியப்பனே மீறியிருந்தவ
யோகர் சித்தர் சகாயம் விரும்புழி
வருஞ்சேயு மான முத்து சாமியே

தனிமகந்த கடம்ப ணிந்தவனே புனம்புகும்
குறமடந்தை யிடம் பணிந்தவனே தகுந் தகுந்

தந்தனுதன என்று மாமயி
லூந்து மாடல்வி ளங்குலாவர
தாதிரிப்பழ னுபுரி நின்றவ
போரிடத்துணி தானவர் அந்தக
உரஞ்சாலு மாதி சத்தி வேலனே

## வேறு வண்ணச் சந்தம்.

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-ஆதி.

ஆரணப்ர சித்த சுத்த மோனவித்த கத்த வத்த
ஆதிநித்ய சத்தி யத்த வாகமத்தி னிச்ச யித்த
வனப்பிறை கங்கையறு குவப்பொட ணிந்தசடை
யருக்கொரு மைந்தருயர் வளப்புகுமிந்தபர
ரேகவடி வாயுலக மேவுலகெ
லாமுறையு நாதசுக போதசுகிர்
தப்பரமசீலர்

மாதவத் தருக்கு மிக்க சாதனத் திருக்கு முக்ய
மாமறைப் பொருட்குறித்த சீதனத்தி னத்த னித்தன்
அரக்கரை வென்றுமம ருக்கரு டந்துமிக
விருப்பொடு வந்துகட லினைக்கடந் தன்பினமு
தாவலக மேவியுண வேதருத
யாளர்மரு கோனெனவு லாவுகரு
ணைக்குணவிசாலர்

போதகத்த னுக்கி ருக்கி மீதகத்தி ருக்கி வைக்க
வாதகத்தி ருக்கி மெய்க்க வோதகத்த ரெத்தலத்து

மிருப்பவ ரென்பிழைகள் பொறுப்பவ ரன்பரக
மினிப்பவ ரங்குலிசந் தரிப்பவ ருந்தகைய

தேவருமி யாவரும னாதிபர
நாதனென வோதவளர் நீதருமை
முத்தமிடுபாலர் திருவேரகமதிலமராவலார்

ஆலமொத்த கட்குறத்தி பாலுவப்பு வைத்து நத்தி
மாதினைப்பு னத்தடுத்து சாலவித்தை யைப்படித்து

வணக்கமுடன்பணிய விணக்கமொடன் பினிய
மொழிச்சர சம்பணிய வளப்பரு மிங்கிதவு

தாரபரி பூரணசு கோதயவி
லாசகும ரேசமுரு கேசருயர்
நித்ய விநோதர்

பாதகத்த ரச்சமற்ற சூதகத்த ரிச்சைமிக்கு
பாதலத்தொ டெத்தலத்து மீதுமுற்ற ருத்திவைத்த

ரசைப்புரி யுங்கொடியர் வசைப்பழி யெங்குமுற
தசைப்புகழென்பதற வொறுக்குமகங்கைகொடு

தேவரகம் வாதையுற வேசிறைசெய்
சூரருர மாயவடி வேரற வெய்
சத்திவடிவேலர்

வேதவித்தன் மத்தகத்து மாமுகத்த னித்த யத்தன்
போதகத்தி லிருக்கு மிக்க மாமகட்க ருத்தன் முற்றி

உருத்திகழ் நிம்பநிழ லிருத்தருள் கொண்டபரன்
ஒருத்தன்ம னங்களியவ் வனத்தழ கின்பமிகு

சோதரவி நோதநவ நீதகுரு
சாமியெம தாதரவ தாகவரு

முத்தம குணாளர் செகமாதி தொழுதகைய காவலார்
வாரணத்தை வித்த ரித்த கேதனத்தர் வற்புறுத்தி
மாமரத்தை மற்று தித்த பூதரத்தை உக்கவிட்ட

வயிற்கர ரஞ்சலிசெ யுயிர்க்கரு ளின்புறுசை
வருக்குய ரன்பரக மிருக்குந ரந்தமயி

லேறிவிளையாடுமொயி லேயிலகு
பாலகும ராதிபதி யாகவளர்
முத்திதரு நாதர்

சாகரத்திடத் தொளித்த சூரரைத் தொலைத்த ழித்த
மாதிரப்பு யத்தர் நித்த மோதி னர்க்க கத்தி ருப்பர்

எமக்கொரு நண்பரென விருப்பவர் சிந்தை மிசை
யிருப்பவர் சந்ததமும் விருப்பவர் சிந்தைமிசை

யாகவுயர் போகபல யோகமும்வி
வேகமுமெ மாவலக மேவுவகண்
டுற்றருளுநேயர்

மாதரத்த நற்ற ரத்த மாதிரத்தி ருத்துசித்த
மாய்கையற்று நற்றவத்தி லேமகத்து வத்தையுற்ற

வகத்திய னின்புறமெய் யகத்தியல் கண்டுதமி
ழகத்திய மும்பலவு மிதத்திய லுங்கருணை

நாடியுப தேசமுறை யேயுரைசெய்
வாததிரு நாதசிவ சோதியுரு

விற்றிகழ்ச காயர் சரணுகதி யருளு முதாரனார்
மாதோருத்தி பத்தியிற்சொன் மாதவப்பெ யர்க்குறித்து
வாதிழைத்த பத்தியற்ற பாதகற்கு வெட்கமுற்று

கரத்தைய ரிந்தகண வனுக்குமன மபதறி
வெருக்கொள வந்தவள்கை யிருக்கொள நன்குதவி

நீடுமருள் சாடியரு ளோடியருள்
வீடமரு மாடிலகு தேடருமு
தற்பொருள் விதானர்

ஓதுமுத்த மத்த வத்தர் சேவையிற்றி னத்து நத்தி
ஏதுவுற்ற வித்தை கற்றுத் தீதகற்று சித்த மற்ற

எனக்குமன னங்கசிய வருட்டமி ழின்பகிதி
விருப்பொடு தந்துவகை யிருப்பவு வந்தெனது

பாவிலதி மோகமுற வேகொள்கரு
ணாகரகு கேசபவ நாசவரு
ணக்கமலபாதர்

வானகத்தி ருக்குமொப்பில் கோன்மகப்பிடிக்கு முத்த
மேமகிழ்ச்சி யிற்கொடுத்துக் கானகக்கு றத்திசொர்க்க

மலைக்குமி குங்கவன மிகக்கொடு வந்துமர
மெனத்தனி நின்றுபல ரொலிக்கொளு மன்புளவர்

ஓதரிய தானவன மேவுசம
ராபுரியி லேவளர்கு மாரகுரு

பத்தரகம் வாழ்வார் தவமேவு குடிலைவரை மீதிலே.

## வேறு சந்தம்.

இராகம்-புன்னுகவராளி-தாளம்-சாப்பு.

பூதரவம்புயனுர் தொழும் பூதரவம்புயனுர்-மயில்
போலவேனலின் காவலார்மினை
யாளவேனலின் காவலார்சிவ
போதரவம்புடையார் சடை மீதமரம்புடையார் - சுதர்
போகமேவுமி னுவலார்கலை
யாவுபோதுமி னுவலார்சுரர்
பூசிதசுந்தரனுர் அடி யார்பரசுந்தரனுர் அதி
போதகாதிப னுதியார்பரஞ்
சோதியாயவ னுதியார்
தாரனுர் அருள் புரியு தாரனுர்
பூமின்வணங்குகையார் வள்ளி யானவணங்குகையார் திகழ்

பூதமாகிய தாயினாறு
மீனுமாமகிழ் தாயினாருள்
வேதநெடுங்கடலார் அசு ரேசநெடுங்கடலார் மயில்

மீதுலாவிய வேகனருயிர்
யாவுமேவிய வேகனர்துதி
ஓதுவர்சங்கமுளார் படு பாதகசங்கமுளார் தினம்

ஓதநீடிய வாரியார்கரு
வாதிலார் புகழ் தாரியார்
சாரியார் கயவரைவி சாரியார்

நீதகலம்பரமே வன மானயிலம்பரமே விழி
சேருமான்மக வாசையார்துதி
கூறநாடிய வாசையாரொடு
வேலினெடும்படையார் இனிமேலெனையும்படையார்-கனல்
வேய்கணேறிய பாலனாரனு
கூலராகிய பாலனார்வளர்
காரணசுந்தரனார் குரு வாயுறுகந்தரனார்-உரு
காதுதீதுள காலனார்பய
மேவராதுசெய் காலனார்
மாரனார் புகழுயர்கு மாரனார்
சேயரியம்பரியார் சுதர் தீயரியம்பரியார் செக
மாதிதேடிய மாலையார்மது
நீபநீடிய மாலையார்திரு

வாமயிலம்பதியார் கரு வாமயிலம்பதியார்-கவி
வாணராதிய ராயினர்கிரு
வாணராதிய ராயினரிகல்

மாசமரம்புரியார் எழின் மாசமரம்புரியார் மலை
வாயுளார்மிகு வாயுளார்மயல்
வாயுளார்வரு வாயுளார்
மாலையே கொளவெனது மாலையே.

## வேறு சந்தம்.

குருதேசிகனர் சிவசுப்பிரமணிக்கு
விலைநாமெனவே தமிழிற் கவிதொடுக்கு

மருமைப் புலவர்சித்த மலரிற் றினநடிக்கு
மிருபொற் கழல்படைத்த பெருமைக்குமாரர்

கருணைகரவேள் பொதியக் கிரியினுற்ற
குருமா முனியா லருண்மெய்ப்பொருளையொப்பி
லொருகைக் கிளியினுக்கு முதவிப் புகழ்பொறுத்த
கருணைக் கடல்படைக்கை பெறுசுத்தவீர

குலசேகரனர் சகுணக்கடவுளர்க்கு
ளுயர்சீருடையார் தனிகிட் களவிருப்ப

மருளிற் றருமொருத்தர் முதன்மைக் கடவுள்செட்டி
மனையிற் குளுமுதித்த புனிதக்குணுளர்
அயிலதனு லமர்க்களத்தை வெல்லுவார்

கொலேவே ரறவே கருதித்தவமியற்று
மவர்பா லணிமா ம்யிலிற் றிகழ்சிறுக்கர்

புலமைத் திறன்மிகுக்கு—மொருபத்தன்வசமற்று
வெருளச் செயலகைக்கோ—ரமனெனுத்த பாலர்

அருணு புரியா லயவட்ட மதினுக்குண்
மனையா டனையோர் தவசிக் குதவுபத்த

னதுகைப் பொருண்முடித்த—சிகரிக்குவடபக்க
மொருசொற் பகருமித்த—ருலகச் சகாயர்

குளிர் தா மரையா கியதொட்டி லதனுக்கு
ளொருசே யெனவா வியலுற்றமுருகப்பர்

தருணத்தி லெமதிச்சை—ஊழிவிற்கு முயர்சித்தர்
பொருகுக்கு டமுழக்க—மலிவுற்ற தோளர்
அடியவர் வாய்மையைக் கருத்திலுள்ளுவார்

திருநீ றணியா தவரைக் கருவிமிக்க
மதுரா புரியூர் வழுதிக்கருள் கொடுத்த

கவலேயுற் றவனேமெச்சு—மனருக் கினியசட்டி
விரதத் தினர்கருத்து முடியச் செய்தேவர்

துணிவே வடிவா கியசத்தி யமதுற்ற
கவுமா ரரையோர் கொதுகிற் கருதுநர்க்கு

நிலேகெட் டறிவுகெட்டு—வழிகெட் டழகுகெட்டு
விழிகெட் டலேயுநட்ட—முறவிட் டவேடர்

181596.

திரையாழியில்வா ழவுணக்கருவறுத்த
பெருமாணெடுமால் விழிபெற்ற மகளிர்க்கொ
ருரிமைக் கணவர் பற்பல—கனவிற்பல்வடிவத்தொ
டொளிர்சத்தி பெருமிட்டர்—மலையுச்சியாளர்
செயிரறு சீர்தொடுத்து மெத்த நல்குவார்

சினைமா முகில்சேர் பொழிலிற் றினைவிளைக்குள்
மயில்போல் வருவார் மயன்முற்றி யவர்செப்பு
மொழியிற் பரதவித்து—விழியில் சுழல்வதுற்று
வலியத் தொழுதிறக்கும்—விடர்சுற்று சாரல்

வளமே விடலா வியமக் கிரியும் கெட்க
வடமே ருவைநேர் சொலகிற்கு மெழில் பெற்று
முனிவர்க்கு மமரர்க்கு—முரகர்க்கு மனிதர்க்கு
மிவரொக்கு மெவருக்கு—முயிரொத்து நீடு

செயலோ டொருமா கதிமத் தியிலெனக்கு
மொருநா ளொருபே றறிவுற் றிடவுணர்த்தி
மலயக் கிரியினுக்கு—மகள்பெற்ற மகவொத்து
முதிர்சொற்ப னுவல்கட்டு—மிகவிச்சையான
திருவுரு மாமலைக்கடுத்த நெல்லையார்.

இராகம்-நோட்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

மாதுபாக மானவா வானவா வந்தனம்
மாமறை புகழ் சொலும் மாசிலாத தாயகா
வாகா சிற்பரா தற்பரா வாமனோகரா
வடிவனிலா சிறியநிலா
மதிபுனைவாய் நதிவனைவாய்
மாரநீறுடி யோய் மாலயன் தேடி யோய்
மங்களா சங்கரா (மா)

க*னமேவுரஞ்சிதா கந்தவே ளின்பிதா
காலனை விழமோதுங் கருணாகராசிவா
கானமேற்றவா நீற்றவா கட்கடாட்சவா
கரியுரியாய் அரிவடிவாய்
நரிபரியாய் வரவிடுவாய்
கங்கையார் மாணரா கங்கணம் பூணரா
காரண ஆரண (மா)

## இராம நாடகம்.

ஸ்ரீராமர் வனஞ்செல்லுஞ் சமயம் சீதாபிராட்டியிடம்

கலித்துறை.

படுக்கை மண்ணாகும் உணவு கிழங்கு பழஞ்சருகே
அடுக்கு மிடங்கள் நடக்கவொண் ணாதமுள் ஆகுமங்கே

தொடுக்கு மிருகசஞ் சாரம் பயந்தருந் துன்பமெத்தக்
கொடுக்கும்பெண் ணேவன வாச முனக்கனு கூலமன்றே.

சீதாபிராட்டி ஸ்ரீராமரிடம்

கலித்துறை.

கோலா கலம்புரி கோதண்ட வீரா குலாவி யென்னை
மேலான கண்வைத்துப் பாராத நாளென் விதிவசமா
பாலா பழமா பகர்சீனி யார்நல்ல பாயசமா
ஏலா தெவையும்நின் மேலாசைகொண்ட விளங்கொடிக்கே

ஸ்ரீராமர் வனஞ்சென்றதைப்பற்றிப் பரதன் தன் தாய் கைகேசியைக் கோபித்தல்.

இராகம்-பியாகு-தாளம்-சாப்பு.

பல்லவி.

நாயகனைக் கொன்றாயடி
நாரியல்ல நீபேயடி

அநுபல்லவி.

மாயவஞ்சகி யாகிராமனை
வனத்துக்கனுப்பி மனுச்சக்ரவர்த்தி (நா)

சரணங்கள்.

குலத்திற்கு முதல் மகனிருக்கையிற்
குறித்தாயோ பட்டம் எனக்கு நீ

நிலத்திற் பழியை விளைத்துக்கெடுத்த
நீலிகெட்டஜெக ஜாலி எட்டியிரு (நா)

அண்ணன் காய்கனி உண்ணவும் நாம்
அமுதவிருந்து பண்ணவும்
எண்ணுமரசாட்சி இனிநமக்குமா
இப்புவி யென்புய மொப்பிச் சுமக்குமா (நா)

## சீதாபிராட்டி வனக்காட்சி.

பலமகஜ லோட்டி என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

அதிசயமநேகம் ஆமாம் அமைந்த வனவாசம்
இதிலுலாவி இன்பந்தாவி எப்போதும் வாழ்வோம் மேவி
இருகண்ணுஞ் சாட்சி என்னென்னகாட்சி
இந்திரபோக மிதிலுந்தாட்சி அல்லவோ
இதிலுந்தாட்சி அல்லவோ
(ப்ராணபதி) ஈடிதற்குச் சொல்லவோ
ஏதே நீடிதற்குச் சொல்லவோ (அ)

சித்ரகூட பர்வதத்திலிருந்த இராமர் முதலானோர்களிடம் சக்ரவர்த்தி உயிர்துறந்தாரெனப் பரதன் வந்துசொல்ல இராமர் புலம்பல்.

விருத்தம்.

அருமையா யென்னை வளர்த்திய காதல்
அப்பனே சக்கரவர்த்தியுன்

திருமுகங் காணச் சிலதினங் கழித்துச்
சேருவேன் வனம்வந்தபோது
பெருகுவாஞ் சையினு லுன்னுயிர் போகப்
பெரும்பத வியை அடைந்தனையோ
தருவிதிக் கென்ன செய்குவே னடியேன்
சஞ்சலந் தீர்த்திட லரிதே.

கண்ணாயிரம் படைத்த என்ற வர்ணமெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மெய்யா எந்தனைப்பெற்ற ஐயா அம்புவியுற்ற
விமரிசை முற்றினு மகலவிடுத்துநீ சென்றுயோ-விண்
அமரர் துதித்திடு பதவி கிடைத்திட நின்றுயோ

பொய்யோ கொண்டநினைப்பு ஐயோ என்னபிழைப்புப்
பூரணமாய் நிறை வேறிவராமலே போனதே-என்
ஆரண்ய வாசமோர் காரணம்போலவு மானதே

காட்டுக் கெனையனுப்பிப் போட்டுநினைவுதப்பிக்
கதிபெறவுற்றதும் விதியின்மகத்துவ நேர்த்தியே-மத
கரியுணு மாவிளங் கனியதை யொத்தது சீர்த்தியே

நாட்டிலிருந்துனக்கு மேட்டிமைமைந்தனிட்டே
நவில்கருமத்தொழில் பொலியநடத்தவுமில்லையே பிள்ளை
உதவி கொடுக்கில எனவசைவைப்பது தொல்லையே

சித்ரகூடபர்வதத்திலிருந்த ஸ்ரீராமரைப்பரதன்அயோத்தி நகருக்குப் பட்டங்கட்டிக்கொள்ள அழைத்தல்.

குடியிற்பிறந்த குயிலே என்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

பட்டாபிஷேகத்தை விட்டுவிலக்கியோர்
கட்டாயத் தென்தாய்து ரத்திய காட்டில்
பட்டத்துத் தேவியுடன் தம்பியாம்
லக்ஷ்மண ஹுவியுடன்
பாதகந்தீர் மாதவஞ்செய்
பாதங்கண்டு பண்ணுவேன் விண்ணப்பமே(பட்)

கட்டாகக் கேட்டுக்க டாட்சிக்க வேணுமோர்
காலப்பிசகென்று யோசித்திடாமல்
எட்டிய யோத்திவந்து பட்டத்தைக்
கட்டிக் கொண்டுபசுந்து
காட்சி யீவாய் சூட்சியா
சாட்சி யாளா கற்பக மாணிக்கமே (பட்)

தாய்வரமா அது வாய்வருமா சற்றே
ஆய்வது செய்துபின் மாய்வது நன்றென்
றேயுன்னை நானடுத்தேன் ராமண்ணு
தேயம தைவிடுத்தேன்

ஏகிடேனே துரோகி யானே
ஆகினேனே என்செய்வே னிவ்விதிக்கே (பட்)

## விருத்தம்.

நீதிக்கு விரோதமாக நின்றுநான் பட்டங்கொள்ளேன்
ஆதித்தன் குலத்தார்கண்முன் அயோத்தியி லிருக்கமாட்டேன்
சாதிப்பாய்நானுங்காட்டில் தவக்கோலம்பெறுவேனண்ணு
போதிக்கவேண்டாம்போதும் போதும்யான்பெற்றபேறே

வேண்டினேன் சையோகமே என்ற வர்ணமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-ஏகம்.

## கண்ணிகள்.

(ராமர்) தந்தை யிட்டகட்டளை தாய்வரத்தை யொட்டியே
வந்துபட்டங் கட்டியே வாழ்வதற்கோ ரட்டியே

(பரதன்) அட்டியில்லையண்ணுஅண்ணு அப்படிமனத்திலெண்ணுக்
கெட்டியாய்வந் துசூடுங் கிரீடங்காணுக்கண்ணோர்கண்ணு

(ராமர்) கண்ணுமென் சகோதரா கசியுமன்புப் பரதனே
எண்ணுமன விரோதரா யிருந்தோமோநா மிதில்முனே

(பரதன்) முன்னே யிருந்தராசர் முறைதவறிடாநரேசர்
இன்னுளி லென்சென்மத்தை ஏசிப்பேசுவாரேநேசர்

வங்காரமார்பிலணி என்ற வர்ணமெட்டு.

இராமர் சொல்.

கண்ணிகள்.

முந்துபதி னுலுவரு டம்போன பின்புநகர்
வந்துமகு டாதிபதி யென்றேயி ருந்தனது
முன்சகல தேசமன்ன ரும்பேண நன்கரசு—புரிவேனே

பரதன் சொல்.

தந்திரிகை கேசிமக னந்தோக வர்ந்தரசு
கொண்டிரகு ராமனைவ னம்போக வுஞ்செய்தது
சந்ததமு நீடுபழியென்றேச னங்கள்சொல—வளர்வேனே

தென்னை கமுகுமலை என்ற வர்ணமெட்டு.

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

தாயாரிடஞ் சொல்லிச் சண்டாளன் பரதன்
தந்தையிடத்தில் வரம்வாங்கிக்
கோயிலயோத்தியிற் கொலுக்கொண்டானெனக்
குவலயஞ்சொல்லும் பழியோங்கி (தா)

கேடுவிளைத்தகை கேசித்தாய்முகம்
நாடிநான்விழிக்க மாட்டேன்
கூடவருவேனண்ணு குடும்பச்சனியனொரு
கூனிகோளிதுசொல்லிப் போட்டேன் (தா)

## ஸ்ரீராமர் பரதனுக்குச் சமாதானஞ் சொல்லுதல்.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

தம்பி பரதா சொல்லச்
சற்றுகிலும்நின்மேற் குற்றமிருக்கிறதா (தம்)

அநுபல்லவி.

இன்பதுன்பங்களெல்லா மிந்தமனேசிருஷ்டி
எந்தக்காரியத்திற்குந் தந்தைதாய்சொல்லனுஷ்டி
பின்பதிற் கீர்த்தியுண்டு பிள்ளைகளால்வட்டி
பெரும்பொருட்பாக்யமாகுந் திரும்பித்திரும்பிக்கொட்டிப்

பேசுகிறாய் புகழ்சேர் தாயாரை
ஏசுகிறாய் மகுடாதிபத்யம்
கூசுகிறாய் விழிநீரால்லென்னைப்
பூசுகிறாய் அடா (தம்)

---

## பரதன் விருத்தம்.

தாமரைப்பாதங்கண்டு தரித்தபாதுகையானாலும்
நேமமா யடியேனுக்கு நேரமீ தருளல் வேண்டும்
ஆமதை வைத்து நான்சிம் மாசனத் தருகே நின்று
மாமனு நீதிப் பூசை வழங்குவேன் அண்ணா அண்ணா

## ஸ்ரீராமர் பரதனுக்குப் பாதுகை தருதல்.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

தருகிறேனிதில் தடையில்லை—இங்கே
தங்கிடாமலே செல்லுவாய்
அருமையான நம் அயோத்திக் குடிகளுக்
கதிகதைரியம் சொல்லுவாய்

பர:— சொல்லுவேன் தாருஞ் சோதிப்பாதுகை
துணைகண்டாலுண்டோ துக்கமே
எல்லையீரேழு வருஷமானபின்
இருக்கவேணும் நான் பக்கமே

ஸ்ரீரா:- பக்கம்நேர் தம்பி பரதனேயந்தப்
பருவத்திற் பட்டம் சேருவேன்

பர:— மெய்க்கவேவாரா விட்டாலக்கினி
வீழுவேன்வரம் கோருவேன்

## பரதன் பாதுகையைச் சென்னியில் வைத்துக்கொண்டு தன்னுடன் வந்தவரோடு நந்திக்கிராமத்துக்குப் புறப்பட்டு வருதல்.

இராகம்-ஆரபி-தாளம்-ஆதி.

பல்லவி.

பாதுகையே நல்ல
பரகதிதருவதும் அரசிதுபுரிவதும் (பாது)

## அநுபல்லவி.

சீதையுடனேசித்ர கூடத்தில்வந்த
ஜெயரெகுபதியதி தயவொடுதந்த (பா)

## சரணங்கள்.

ஓதுமுலகிலெனக் கிலையபவாதம்
ஓடிவந்தேனேய னேகங்காதம்
வேதரகசியம் விளங்குவினோதம்
மேலெனக்கினியென்ன வேணும்ப்ரசாதம் (பா)

அண்ணனிருக்கத்தம்பி யாளரசாட்சி
ஆகாதாகா ததுவெகுதாட்சி
உண்மையென்தாய்மன மொப்பிடுஞ்சாட்சி
உலகிலெவரெவர்க்கும் விலகாதகாட்சி (பா)

ஏக்கமறப்பெற்றேன் இதுசித்ரகூடம்
ஈரேழுலகுமுண்டோ இதிலும்விசேடம்
நாட்கவிமணி முத்து சாமிதன்பாடம்
நாடிநிந்திடவேநான் சூடுங்கிரீடம் (பா)

## நந்திக்கிராமத்தில் ஸ்ரீராமர் பாதுகையைப்பரதன் பூஜித்தல்.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ரூபகம்.

## கண்ணிகள்.

ஸ்ரீரகுநாயகன்பா துகைக்காட்சி
பாதுகைக்காட்சி எதினித்தாட்சி (ஸ்ரீ)

தீங்கிலென் தாய்செய் பாங்குசகாயம்
ஓங்கியநேயம் தாங்குமுபாயம் (ஸ்ரீ)

கொத்தலர்சாத்தி மெச்சுவேன்ஏத்தி
சித்தியோத்தி நத்தியநேர்த்தி (ஸ்ரீ)

பந்தனராமம் சிந்தையின் க்ஷேமம்
நந்திக்கிராமம் முந்தியநேமம் (ஸ்ரீ)

சரபவிசேடம் தங்கியபாடம்
பரதகிரீடம் பாக்கியபீடம் (ஸ்ரீ)

---

## ஸ்ரீராமர், சீதை, லக்ஷ்மணர் மானைக்கண்டு தர்க்கம்.

இராகம்-மால்கோஷ்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

(சீதை) மேனியெல்லாம் வெள்ளியே
விளங்குகின்ற புள்ளியே
மானிங்கேதோ வந்து விளையாடுது துள்ளியே

(ராமர்) நானிதுவரை கண்டதே இல்லை கண்ணே
நானிதுவரை கண்டதே இல்லை
நல்லபொன் வண்ணம்
நமக்குமே எண்ணம்

(லக்ஷ்) நம்பிக்கொண்டு நம்பிக்கொண்டு
வைகிற தேனண்ணு செய்கையிலேயிது
பொய்யுருவந் திண்ணம்

(சீதை) பொய்யென்றநின் தம்பிக்கே
புகலவேண்டாம் நம்பிக்கை
யைப்பற்றவேணுஞ்சென்று கையில்வேடிக்கை

(இராமர்) அடி தையலே நான் தருவேன் பற்றியே
தடத்தில் சுற்றியே நல்ல
தந்திர முற்றியே

(லக்ஷ்) அண்ணுகேளும் அண்ணுகேளும்
தந்திரமாகவே சிந்தையறிந்திட
வந்தமா ரீசனிவன்

---

வாராயெனை யணைய என்ற வர்ணமெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-சாப்பு.

பல்லவி.

தாகந்தீர்க்குந்த ,டாகம் சோலையொரு
பாகம் மேலும்ப யோகம்
தனிவழியுலவிய வனமதிலதிசுக (தா)

அநுபல்லவி.

வாகானமாங்குயில் மாமயிலாடையில்
வண்ணம் பாட என்
மனமுருகுதுபரி மளமுடன்வருகிற (தா)

சரணம்.

மந்தமாருதவ சந்தமானவை
போகம் வேணுந்தவ யோகம்
மதுகரமிசைபயில் வதுநலமே (தா)

சந்தான கிருஷ்ணசௌ பாக்கிய கோலாகல
சந்துஷ்டி யே செந்
தமிழொடு பழகிய முனிவளர் பொதிகையின் (தா)

---

நாரே நாக்கர் என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

சோலைச் சிங்காரம் சொல்லவெகு கெம்பீரம் (சோ)

அநுபல்லவி.

சேனுலாவும்பொய்கையோரம்சேருமாலைநன்னேரம் (சோ)

சரணங்கள்.

நல்லலரி மல்லிகைப்பூ முல்லையுடன் சாதியே
செல்வமருக் கொழுந்துஞ் செவந்திப்பூவுஞ்சோதியே(சோ)

5

காட்சி யிருவாட்சிமலர் தாட்சியில்லா மந்தாரை
மாட்சிமைக்கனிரசங்கள் வடிந்தன செந்தாரை (சோ)

பிச்சியுஞ் சாமந்தியும் பிணிக்கும் வெட்டி வேருமே
செச்சைநந்தியா வட்டையுஞ்செண்பகமுஞ்சேருமே (சோ)

வண்டினம் புரண்டுமது உண்டுபாடுங் காந்தாரம்
கொண்டசெவிக் கானந்தங் குயில்குருவிசஞ்சாரம் (சோ)

தென்றலும் மகரந்தத்தை நன்றுகொண்டு பூசுமே
மன்றல்முத்துசாமிகவி வண்ணம்போன்றவாசமே (சோ)

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

தேசோமயா னந்தம் நான்
தெரிசித்திட அற் புத ஒப்பந்தம் (தே)

அநுபல்லவி.

மாசே தவிரும் பூரண மதியம்
மாமேருவெனும் பாரவதிசயம்
மஞ்சுமிகுஞ்சய னந்தனிலண்டியி
ருந்ததுகண்டும கிழ்ந்தது சிந்தை (தே)

பல்லவி.

சரபமுத்துசாமி காளி
தாசனை நிதமும் பூசனை புரியும் (சர)

அநுபல்லவி.

புரவலன் நானும் போஜமணுளன்
பூவாய் உன்னொரு ஆவல் கணுளன்
கருதுபுத்திசா கரத்தயாளன்
கட்டுரைக் கடங்கிவிட் டேன் குணுளன் (சா)

---

சந்த விருத்தம்.

சிவனூர் செலுத்து ரதமே ஒடித்த
திரளான முக்கண் முதல்வோனே
தவயோக சித்தர் குணசீல பத்தர்
தழைதார கத்தில் வளர்வோனே
கவலான பற்று மனமாயை யுற்ற
கடையார் தமக்கு ளதிதூரா
அவிரோத மிட்டிவ் வடியேனை ரட்சி
அமலாது திக்கை இறையோனே

---

இராகம்-இந்துஸ்தான்-தோடி-ஆதி.

பல்லவி.

தென்மதுரை மீனாட்சி பாதம் தெரிசிக்கவேணும் (தெ)

அநுபல்லவி.

சிந்தைக் கின்பம் சந்ததமுந்தோணும் (தெ)

சரணங்கள்.

சொன்மணிச் சோதிக்கு விண்மணியாகிய
சூரியனும் நானும்
சோபிதஞ்சேர் ஆபரணம் பூணும் (தெ)

காலமெல்லாமலங் கோலமாயைக்குள்ளே
கட்டுப்பட லாமா
மேலாமோட்சம் விட்டுவிடலாமா (தெ)

சாதுசனப்பிரிய சரபமாமுத்து
சாமியுடன் கூடி
பாதுகாக்கும் பஜனையையேபாடித் (தெ)

---

தும்ஜாதீது முஸ்பர்க்குபான் என்ற மெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஆதி.

ஆறுமுகமுடையாய்—செங்கையி
லழகிய வேற்படையாய்
ஏறுஞ்சிகி யுடையாய்—காத்திடுதற்
கேனோ இன்ன முந்தடை—இறையவ
னேயிந் நாண் கொடியாய்
என்மீ தினம் வாதுசெய்வ—தாகாதே
செய்தா லுனை நீங்கிப்பாவம்—போகாதே
ஏற்றினேன் கல்யாண—சுந்தரனே (ஆ)

மஞ்சுநிகர் குந்தளமின்னே என்ற வர்ணமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

வந்தனர் சுகந்த உல்லாசர் வந்தியிற் செல்லூர்
செந்திரு நல்லூர் வாழ்தரு மழுதலிங்கேசர் உரு
மாறியேபலி தேறினர்மனை தோறுமேகலி லாறினர்புனை
மண்டபத்திற் கண்டனேநானே மெய்மறந்தேனே ஐயருந்
வாய்மலர்ந்தார் கேண்மடமானே [தானே

பந்தியன்னந் தந்தமாதிரி இன்னமுங்காணேன்
பின்னெதும்பேணேன் பக்கமாநீ நிற்பதேசரி தானப்
பாலிருந்தா லோகலந்தே மேல்வருந்தே னேயிடம்பார்
பார்வையாதோபாவையேஎன்றுர் போகமனமே ஆகமுன
பாங்கதென்றேன் பாங்கரே நின்றுர் [மே

மாலதிகந்தந்துதையவே நீபரியங்கம் தாபரிபங்கம்
வஞ்சமேன்தாகஞ் சிதையவே உன்றன்
வாரிலே இளநீரிலே மனநேரிலே உளசீரிலே கன
வம்புசெய்தா லென்பசிபோமோ அம்மணங்கொண்ட
அன்பகமே தாமதமாமோ [நன்மனங்கண்ட

சாலநீ சொலாயெனச் சொன்ன தமிழ்விடங்கர் அமுதலிங்
தங்கருத்தின் சங்கதியென்ன கவிச் [கர்
சரபமுடிமலை முத்துசாமியின் விரதபலனிடு கர்த்தராகிய

சங்கரர்மே லங்கெனக்காவல் உண்டுமின்னுளே கண்டு
சாரநின்று ஹூரதோ காவல் [நன்னுளே

---

இங்கு வந்த என்புருவை என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

நித்தநித்தம் நற்பஜனை பத்தர் சங்கங் கூடிக்கொண்டு
நெக்குருகி நெக்குருகி நற்கீர்த்தனம் பாடிக்கொண்டு
நெஞ்சமே தஞ்சமே
அஞ்சாமற் பெற்றிருப்பா யானந்தமே நீடிக்கொண்டு (நித்)

தந்தைதாய் பந்துஜனர் சந்தையிலே வந்தகூட்டம்
சிந்தையிலே இந்த நாட்டம் சந்ததந் தீராதவாட்டம்
கந்தனைச் சிந்தனை
எந்தநேரத்திலுஞ்செய்தி ருப்பது வெகுசிரேட்டம் (நித்)

படிக்கிறது தேவாரமே இடிப்பது சிவாலயமே
பிடித்ததீ முடிக்கெவர்தாம் பேணுவர் பூமாலையுமே
அடிக்கடி துடிக்கிருய்
நடிக்கிருய் நீ பின்னெழுந்து நல்லதுந்தன் நாணயமே (நித்)

கோனருப்புக்கொட்டை முத்துக் குமரமுருகேசனையே
தானவிலும் ஞானமுத்து சாமிக்கவி ராசனையே
கண்யமா நண்ணியே
நோன்புகொண்டிருந்ததுபோயேன்பலவாம்யோசனையே

பஜாயுமே தில்பேன கானுஸே என்ற வர்ணமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஆதி.

பல்லவி.

மயூர மிசையேறி வாவேலா திரு
வள்ளி தெய்வானை மகிழ் கூர் சீலா (மயூ)

அநுபல்லவி.

தாருகனோடுபல தானவரைவென்றவனே
சாயாத வேங்கைமர மாக வனம் நின்றவனே
வாருசடையோன் செவியில் மந்திரம்பு கன்றவனே
மானில மீதிசைய முத்தொழில்பயின்றவனே
வாவாகல் யாணசுந்த ரன்பணியுமேலவா
வையாபுரி வாழ்பவனே (மயூ)

ஜப்தகலந்தரு என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-கமாசு-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

சப்தங்கலந்தசி லம்பணிபதமுறு
சரவணபவ ஓம் குருநாதா
தாரணிமிசைதினஞ் சாற்றிய முறைகளுன்
தண்செவி புகவிலை யோநீதா
சத்திவேலெடுத்தபன்னி ரண்டுகையனே கேட்கும்
முத்திவீடளித்திடற்கு கந்தமெய்யனே மறை

மூலாவு மையவள் சுதா மன
முன்னி நின்ற னன் கல்யாண
சுந்தரன் சதா மிகு (சப்)

---

தாமோதரராமா என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆவலானேன் சேவையினி அருள்பெம்மானே (அ)

அநுபல்லவி.

ஆமோகர வடந் தாமோதர னே நீ
ஆளாம லேவீணி லேநாளை யாக்குவ தேனே (ஆவ)

சரணங்கள்.

பூமகள் மருவும் புருஷோத்தமனே
மாமடுவில்யானை தனைக் காத்தவனே
பூமனையுந்தியிற் பூத்தமாதவனே
நேமமாய்க் கல்யாணசுந்தர தாசுக்குத் தானே (ஆவ)

தாயேநமஸ்காரம் என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

வாசுதேவயோகா வரமருள்வராகா
தேசயருந்தேகாசெய் யாள் மருவுமோகா

ஜெகநாத விவேகா மிகுந்
திடத்தகஞ்ச வடிக்குத் தொண்டுசெய்
திருக்கச்செய் ஈசா (வா)

பூந்துளபத்தாரா புகழும் ரகுவீரா
வாய்ந்திடுமுதாரா மலரடியைத்தாராய்
திருமாலெனும் பேரா சிறு
வனுக்கருள் புரி சிறைக்கருடன்மீ
திருக்குமொய் யாரா (வா)

---

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

சங்குசக் ராயுதனே வெண்
சங்குசக் ராயுதனே (சங்)

அநுபல்லவி.

சதுர்மறைதே டரியகுண
காமுதலே பரவெளியே
சாலமான தேசெய்யாம
லாளுவா யிவ்வேளேயே வெண் (சங்)

சரணம்.

பாரமலேயை எடுத்தவனே விண்
மாரியதனைத் தடுத்தவனே
மாயாவிலாசா வா ஸ்ரீனிவாசா

வனமதில்மான் படக்கணையே
வியதிரனே மலிபுயனே
மாது சீதை நாதனுன
சீதராலோ காதரா வெண் (சங்)

யாணர்மிகுந்தமி ழாலேகவி
யாணசுந்தரன்வ ணக்கஞ்சொலி
யாசித்தேன் நின்றாட் பூசித்தேன் நிற்க

அருளுவையே பரமதயா
பரபுயல்மே னியபுனிதா
யானையாதி மூலமென்ன
வோதிநின்ற காலேசென்ற (சங்)

---

மஞ்சுநிகர் குந்தளமின்னே என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாகு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

செங்கைவடி வேன்முருகையா சிவசிவாச ரவணபவா
சேவடி துதித்தனன் மெய்யா என்
சிந்தைநொந்துவருந்துகின்றன னிந்தவேளையுகந்துவந்தரு
டேசிகனும் பன்னிருகையா தினமுமுன்றன் செவியிற்படச்
செய்திடும்மு றையெல்லாம் பொய்யா (செ)

மங்கைவள்ளி குஞ்சரிபாகா வனசன் முதல் சுரர்கள் பணி
மாமலர்க்கடம்பணிவாகா அன்று
மாசுபுரியும்தி சாசரர்கள்குல நாசமுறும்படி யாசமரம்விளை
வல்லமை மிகுந்தநல்யோகா மரகதமா மயிலின்மிசை
வந்தருள்வா யாரண யூகா (செங்).

எங்கணும் நிறைநிரந்தரா எழில்பழநிக் கிரிவளரும்
எந்தலே வள்ளாறு கந்தரா சரு
வேசன்மகிழுப தேசகுகைதொறும் வாசஅடியவர் பாசவினையற
வேற்றிடுஞ் சுகிர்த தந்திரா இமவரசன் மகளருளும்
என்னையா கல்யாண சுந்தரா (செங்)

---

நாரதன் சொன்ன காரணப்படி என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாகு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மன்றலார்பரங் குன்றமாநகர்
வந்திடுங்கதிர் வேலா குற
வள்ளிகுஞ்சரி லோலா நம்பும்
வானவர்க்கனு கூலா மன்றுள்
மாறியேநட மாடுவான்பெறு
மைந்தனனசு சீலா (மன்)

உன்றனைக்கதி என்றுநான்சதா
உன்னியதறி யாயா என்றன்

ஊழ்வினையகற் றுயா மறை
ஓதுஞ்செந்துவர் வாயா விண்ணில்
ஓங்குமேருவைத் தாங்கியேசெண்டால்
உடைத்திடுங்கார்த்தி கேயா (மன்)

அற்பவாழ்விது கற்பநாள்வரை
அழிந்திடாதென வெண்ணி பணத்
தாசையாலிந்த மண்ணி லுளார்க்
காளதாத்தொண்டு பண்ணி மன
மலுத்திடாதுநின் வலுத்ததாள்மலர்
அருளுவாயருள் நண்ணி (மன்)

என்னடி நான்பெற்ற மங்கை என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாகு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

தென்மதுரை மீனும்பிகையே தடாதகையே அம்பாலிகை
[யே என்றன்
தின்மைநீக்காதகதென் வகையே உன்றன்
திருமலரடி தனைநிதந்துதி புரியடியவன் மிசையிதுததி
சித்தம்வைத்தாளவக்கரையே னிலை
உத்தமியே பராபரையே (தென்)

புன்மையே னெய்துங்கவலையே எண்ணத்திலையே கடலலை
[யே எனப்
போன்றதென்சித்தத்தி னிலையே யார்பால்

புகலுவனிது புரமெரிபட நகைபுரியர ெனுடுதிடமுடன்
பொற்சபையாடுங் கவுரியே சிக
ரச்சிலம்பீன்ற குமரியே (தென்)

யான் கடைத்தேறுவதென்றோ மைந்தனன்றோ யாவனென்றோ
யாதுஞ்செய்யா தற்றாய் நன்றோ திரு [தயை
அரிவாகினி சிவயோகினி பரிவாயுன தருளீகுவை
யாரணி சக்கர பாணி மகிழ்
நாரணி யானகல் யாணி (தென்)

---

ஆலிலைமேற் பள்ளிகொண்ட என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாகு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

அக்கரையாய்ப் பேசவந்தாய் கைக்குள்ளாக நானுமேமே
லாமினுக்கி யாதிருநல் லூரனே—முத்து
சாமிதமிழ்ச் சொல்லினலங் காரனே

குப்பையணைந்தாலுங்கோழி வைப்பதுண்டுமுட்டையந்தக்
கொள்கைபற்றி உள்ளடங்கி யோசிப்பாய்—மனந்
துள்ளினுற்போய்க் கள்ளிகள்முன் யாசிப்பாய்

வேணுமென்றால் வேணுமேபின் வேண்டாமென்றால்வேண்
வீணுக்கென்ன பாணிக்கிறசேதியே—மண்ணில் [டாமே நீ
ஆணுக்கும்பெண் ணுக்குஞ்சரி நீதியே

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

நாரதன் சொன்ன காரணப்படி
நாண்மலர்ப்பெருங் கன்னி தனை
நாளுமேமன மெண்ணி நிறை
நறுமணச்சோலை நண்ணி அவள்
நன்மொழியதா லின்புறுங்குக
நாதனே மோக முன்னி

தேரதன்மேலே சித்தசனேறிச்
சென்றுசென்றுகைப் பாணம் எய்ய
வென்றியின்றியே நாணம் சொல்ல
நன்றுகொள்வம்ப்ர யாணம் ஜெயம்
சேர்ந்தமேனிய னின்றவேலனே
செய்குவேன் மனத் யானம்

அப்பசுந்தமிழ்ச் சுந்தரர்க்கேயுன்
அப்பனும் ஒரு தூது கிருஷ்ணன்
அன்றி அர்ச்சுனற் கேது நினக்
கண்ணனேவந்த போது உற்ற
அன்பனே ஏழை துன்பமேதவிர்த்
தாளவும் என்தகாது

ஒப்புமிங்குனக் கென்று தானித்தம்
ஓமலிக்குதே பூமி தமிழ்
உடுமலைமுத்து சாமி செந்நெல்
லூர முதப்பேர் வாமி ஆன
உன்னன்னைமெச்சு மண்ணலே எந்தன்
ஊழ்வினை தீர்ப்பாய் நேமி

## ஸ்ரீ மீனாட்சியம்மை திருக்கல்யாணம்.

அம்மை திக்குவிஜயம், சோமசுந்தரர் தர்க்கம்.

பஜாயுமே தில்பேனு காணுசே என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

என்னைக்கண்டு கைவில்லைக்கீழ்ப் போட்டாயே
உன்கை வல்லமையை என்முன்னே காட்டாயே
வந்த சண்டையிலே நந்திதேவர் ஓடோட
அந்தச்சந்தடியிற் சண்டேசர் ஊடாட
முத்துசாமிக்கவி மாலையெல்லாம்நீசூட
நான்—சங்கதியுந்தெரிந்து முன்காணநேர் நாட (என்)

மங்களம்.

இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

நித்யமங்களம் சுகிர்தஜெய (நித்ய)
மநு நிருபர் நீதி பெறு
தரணியாதி யுறு (நித்ய)
சத்யலோக சரஸ்வதி சதுர்வேதம்
மெய்த்த விந்து நாதம்
அபரிமித முற்றஜீவபோதம்
சரபகன முத்துசாமிக்கீதம் (நித்ய)

முற்றுப் பெற்றது.

181596

## இராஜ வாழ்த்து.

தாஜ ராஜ தாஜ ராஜ என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-காம்போதி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஞாயமான செங்கோல் இங்கிலீஷ் ராஜரீகமே—எந்த
நாளைக்கும் மாமுத்து சாமிக்கும் பேர்வைக்கும் ஞானயோகமே

நம்புதபாலுந் தந்தியும் வித்யாரம்ப ஹைஸ்கூலும்
நாடுங்காலே ஜோடும் வைத்திய நன்னயமும் மோதும்

ரயிலுங் கப்பலு முன்கண்டோமோ நாளிதுபோலும்
நாளிதுபோலும் நாளிதுபோலும் நாயிதுபோலும் (ஞா)

## முக்கிய அறிவிப்பு ரிஜிஸ்டர் காபிரைட்.

இதனால் சகல புத்தகக்கடைக்காரர்களுக்கும், பப்ளிஷ் செய்யுந் தொழிலாளர்களுக்குந் தெரிவிப்பது:—

உடுமலை முத்துசாமிக்கவிராயர் இயற்றிய பக்திரஸ கீர்த்தனங்கள் என்ற தலைமைப் பெயரிட்ட புத்தகத்தை நாமே மனப்பூர்வமாக மதுரைப் புதுமண்டபம் புத்தக வியாபாரம் இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனாரவர்களுக்கு ரிஜிஸ்தர் செய்துகொள்ளும்படி உத்திரவு கொடுத்திருக்கின்றோம். ஆகையால் இப்புத்தகத்தையாவது, இதிலுள்ள பாடல்களில் எதையாவது அச்சிடுவார்களேயானால் "ஷையார் கோரும் நஷ்டத்துக்கெல்லாம் பாத்தியப்படுவார்கள்" என்பதைத் திட்டமாய் அறியவேண்டியது.

இப்படிக்கு, உ. முத்துசாமிக்கவிராயர்.

---

இதன் இரண்டாம் பாகம் தற்கால நூதன வர்ணமெட்டுகளில்புதிய பாடல்களால் நிறைந்துவெளிவந்திருக்கிறது. விலை அணா /

மதுரைத் தமிழ்வித்வான்
ஸ்ரீ: நா கிருஷ்ணசாமி நாயுடவர்கள் எழுதிய

# சாவித்ரி சத்யவான்.

## ஓர் இனிய தமிழ் நாடகம்.

இதில் அமைந்துள்ள வர்ணமெட்டுகளின் இனிமையும், பாடலின் பெருமையும், வசன சாதுர்யங்களின் அருமையும் நவரச பூர்த்தியாகவே இருக்கும்.

| | | |
|---|---|---|
| 1, 2 பாகம் | விலை அணா | 0—4—0 |
| ஸ்ரீகிருஷ்ணலீலா | ,, | 0—4—0 |
| நல்லதங்காள் சரித்திரம் 1, 2 பாகங்கள் | ,, | 0—4—0 |
| ஷை காந்தி தியானம் சிங்காரப்பாட்டுகளுடன். | | 0—1—0 |
| ஷை இராமாயணத் திருப்புகழ்காவடிச்சிந்து, | | 0—2—0 |

---

முத்தமிழ் க்ஷேத்திர மதுர பாஸ்கரதாஸவர்க ளியற்றிய

| | | |
|---|---|---|
| இந்து தேசாபிமானிகள் செந்தமிழ்த் திலகம் 1, 2 பாகங்கள் | விலை அணா | 0—6—0 |
| புதிய பெரிய பக்திரஸக் கீர்த்தனங்கள் | ,, | 0—5—0 |
| ஷை இரண்டாம் பாகம் | ,, | 0—5—0 |
| லலிதாங்கிசரித்திரம் ஷையாரியற்றியது | ,, | 0—8—0 |
| வள்ளியம்மை சரித்திரம் ஷை | ,, | 0—6—0 |
| அதிரூப அமராவதி ஷை | ,, | 0—6—0 |
| சகுந்தலா 1, 2 பாகங்கள் ஷை | ,, | 0—8—0 |

உடுமலை முத்துசாமிக் கவிராயரவர்களியற்றிய

| | | |
|---|---|---|
| இராமநாடகம் (படங்களுடன்) | விலை ரூ | 2—0—0 |
| பக்திரஸக் கீர்த்தனங்கள் | | 0—5—0 |
| ஷை இரண்டாம்பாகம் | | 0—5—0 |

வந்து விட்டது! வந்து விட்டது!

தமிழ் நாடெங்கும் புகழ்பெற்றுள்ள கன்னிச்சமீன் சரபம்

உடுமலை முத்துசாமிக் கவிராயரவர்களியற்றிய

# இராமாயண நவீன நாடகம்.

ஏழுகாண்டங்களும் சம்பூர்ணமாக அடங்கப்பெற்றுள்ளது.

முந்துங்கள்! புத்தகத்திற்கு முந்துங்கள்!!

இகபர சாதனங்களுக்கு இன்றியமையாததும், இஷ்டகாமியார்த்த சித்திபெறச் செய்வதும், நம்மவர்களின் ஆதி இதிகாச புராண காவியமானதும் ஆகிய இராமாயண காவியத்தை முற்காலத்துக் கவிவல்லோர்கள் பலவித காவியங்களாகச் செய்து உலகத்தை இன்புறச் செய்திருக்கிறார்கள் எனினும், அவை "தற்கால நாகரிகத்திற்கு அநுகூலமானவை அல்ல" என்பது நன்கறிந்ததே.

தற்காலம் நாடெங்கும் பரவி நடிக்கும் நாடகத்தார் முதலிய நண்பர் பலரும் விரும்பியவண்ணம் சிருங்காரம், வீரம், சோகம் என்ற ஒவ்வொரு பாகங்களின் சமயத்திற்கு ஏற்றவாறு இந்துஸ்தான், பார்ஸி, கெஜல், டோமரி, தில்லானா, டப்பா, திருப்புகழ், வண்ணம் முதலிய பற்பல அற்புத வர்ணமெட்டுகளாலியற்றப்பெற்ற பாடல்களாலும், படிப்பவர்களுக்குப் பிரத்தியக்ஷமாக நடைபெறுவதுபோலத் தோற்றும் நாவல்கள் போன்ற சிறந்த செந்தமிழ் வசனங்களாலும் மேற்கண்ட சாதுரிய மாதுரிய சரபம், உடுமலை முத்துசாமிக் கவிராயரவர்களாலியற்றப்பெற்று உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு, ஆப்டோன் என்ற சித்திரப்படங்களால் அலங்கரிக்கச்செய்து, சொற்பக் காப்பிகளே தயாரித்திருக்கிறோம். புத்தகத்திற்கு முந்துங்கள். விலை ரூ 2.

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,
புத்தகவியாபாரம், புதுமண்டபம்,
மதுரை.